தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

05.06.2013 A.M

## "சிறு விவசாயிகள் நிலங்களில் பண்ணைக் குட்டைகள்'

விழுப்புரத்தில் சிறு விவசாயிகளின் நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைக்கப்படும் என்று மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகள் நிலங்களில் பண்ணைக்குட்டைகள் அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

மழையில்லாத காலங்களில் இக்குட்டையில் உள்ள தண்ணீரைப் பயன்படுத்தி விவசாயம் செய்யும் வகையில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த பண்ணைக்குட்டைகளை 15 மீட்டருக்கு 15 மீ, 15-க்கு 30, 15-க்கு 45, 30-க்கு 30, 30-க்கு 45 என்ற அளவுகளில் ஒன்றரை முதல் 2 மீட்டர் ஆழம் வரை அமைக்கலாம்.

மண்ணின் தன்மையைப் பொறுத்து ஒரு பண்ணைக்குட்டை அமைக்க அதிகபட்ச மதிப்பீட்டுத் தொகையாக ரூ.1.5 லட்சம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனவே தங்கள் நிலங்களில் பண்ணைக்குட்டைகள் அமைக்க விரும்பும் தகுதியான நில உரிமையாளர்கள், ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊராட்சி), கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் வேளாண்மை அலுவலர்களை அணுகலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொடைக்கானலில் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

கொடைக்கானலில் மழை பெய்ததால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கொடைக்கானலில் கடந்த மூன்று நாள்களாக அவ்வப்போது மழை பெய்து வருகிறது. ஏற்கெனவே, கொடைக்கானலில் தண்ணீர் பிரச்னை இருந்து வந்த சூழ்நிலையில், தற்போது பெய்து வரும் மழையால் பொதுமக்கள் நிம்மதி அடைந்துள்ளனர்.

இந்த மழையால், நீர்வரத்துப் பகுதிகளான வெள்ளி நீர்வீழ்ச்சி, பியர்சோழா அருவி, பாம்பார் அருவி, செண்பகா அருவி, பேரி பால்ஸ் உள்ளிட்ட பகுதிகளில் நீர்வரத்து தொடங்கியுள்ளது. இதனால், புறநகர்ப் பகுதிகளில் தண்ணீர் பிரச்னை குறைய வாய்ப்புள்ளது.

மேலும், இந்த மழையால் விவசாயப் பணிகளில் ஈடுபட ஏதுவாக உள்ளதால், விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ஏரியில் தண்ணீர் திருட்டு: கொடைக்கானலில் தண்ணீர் பிரச்னை ஏற்பட்டு வரும் நிலையில், காட்டேஜ்கள், விடுதிகளுக்கு ஏரியில் அனுமதியின்றி லாரி மூலம் தண்ணீர் எடுத்து ரூ. 3 ஆயிரத்துக்கு விநியோகம் செய்யப்பட்டு வருவதாகப் புகார் எழுந்துள்ளது. ஏற்கெனவே, ஏரி தண்ணீர் குறைந்து, அதன் பொலிவும் குறைந்து வருகிறது.

தண்ணீர் மாசுபடிந்து காணப்படுகிறது. இதனால், ஏரி நீரை எடுக்கக் கூடாது என நகராட்சி அதிகாரிகள் உத்தரவிட்டிருந்தனர்.

ஆனால், இரவு நேரங்களில் 10-க்கும் மேற்பட்ட லாரிகள் மூலம் ஏரியிலிருந்து தண்ணீர் திருடப்படுகிறது. மேலும், செண்பகனூர், அப்சர்வேட்டரி, நாயுடுபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள ஓடைத் தண்ணீரையும் மோட்டார் மூலம் பம்ப் செய்து எடுத்துச் செல்கின்றனர்.

இந்த நீர் திருட்டை தடுக்க வட்டாட்சியர் மற்றும் நகராட்சி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## விளைநிலங்களை வீட்டுமனைகளாக மாற்றுவதைத் தடுக்க வலியுறுத்தல்

விளைநிலங்களை வீட்டுமனைகளாக மாற்றுவதைத் தடுக்க முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து கட்சியின் மாவட்டச் செயலாளர் க.சகாதேவன், முதல்வர் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அமைச்சருக்கு அனுப்பியுள்ள மனு விவரம்:

உலகில் தலைசிறந்த சுற்றுலாத் தலமாக நீலகிரி மாவட்டம் விளங்குகிறது. மலை மாவட்டத்தில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையிலும், இயற்கை பேரிடர்களிலிருந்து பாதுகாக்கவும் கட்டட வரைமுறை சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் வசதி படைத்த சிலர் மாவட்டத்தின் பல இடங்களிலும் விளைநிலங்களை வாங்கி வீட்டுமனைகளாக மாற்றி வியாபாரம் செய்கின்றனர்.

சட்டத்துக்கு புறம்பாக சொகுசு விடுதிகளை முறையாக அனுமதி பெறாமல் கட்டி வருகின்றனர். கோத்தகிரி, குன்னூர், உதகை மற்றும் கூடலூர் பகுதிகளில் புதிதாக மனைப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

வெளி மாநிலங்களிலிருந்து வசதி படைத்தவர்கள் விளைநிலங்களை வாங்கி ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்வதால், தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் நடுத்தர மக்கள் வீட்டுமனை வாங்க முடியாத அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இவர்கள் நிலங்களை வாங்குவதற்கும் பதிவு செய்வதற்கும் முகவரி சான்றிதழ்களான குடும்ப அட்டை, வங்கிக் கணக்கு, வாக்காளர் அடையாள அட்டைகளையும் சட்டத்துக்கு புறம்பாக பெற்று, நிலங்களை தங்களது பெயர்களில் பதிவு செய்து வருகின்றனர்.

அரசுக்குச் சொந்தமான செக்ஷன்-17 நிலங்களை அதிக தொகை கொடுத்து வாங்குகின்றனர்.

குறிப்பாக கூடலூர் பகுதியிலுள்ள நீராதாரங்களான வயல்வெளிகளை வாங்கி மனை பிரிவுகளாக மாற்றி வருகின்றனர். கூடலூர் நகராட்சியில் எந்தவித அனுமதியும் பெறாமல் சில அதிகாரிகளின் துணையோடு கட்டடங்களை கட்டி வருகின்றனர். இதனை நகராட்சி நிர்வாகம் கண்டுகொள்ளாமல் இருக்கிறது. கூடலூர் பகுதியில் முறைகேடாக வாங்கியுள்ள நிலங்களின் பத்திரப் பதிவை ரத்து செய்வதுடன், முறைகேடாக அனுமதி பெறாமல் வயல்வெளிகளில் கட்டப்படும் வீடுகளையும் தடுத்து நிறுத்த வேண்டும்.

## திருவண்ணாமலையில் மழை

திருவண்ணாமலையில் செவ்வாய்க்கிழமை இரவு பெய்த திடீர் மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக வெயில் அளவு அதிகமாகப் பதிவாகி வந்தது. செவ்வாய்க்கிழமை பகலில் கூட அனல் காற்று வீசியதால் வாகன ஓட்டிகள், பயணிகள்

பெரிதும் சிரமப்பட்டனர். இந்நிலையில், இரவு 8.30 மணிக்கு திருவண்ணாமலை, வேங்கிக்கால், ஆட்சியர் அலுவலகம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மழை பெய்தது.

தொடர்ந்து 1 மணி நேரத்துக்கும் மேலாக பெய்த மழையால் ஆங்காங்கே மழைநீர் தேங்கி நின்றது. குளிர் காற்று வீசத் தொடங்கியதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## பருவ மழை: முன்னேற்பாடுகள் குறித்து அலுவலர்களுடன் ஆட்சியர் ஆலோசனை

தருமபுரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவ மழையையொட்டி, முன்னேற்பாடுகள் குறித்து அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சியர் செவ்வாய்க்கிழமை ஆலோசனை நடத்தினார்.

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் ஆட்சியர் ஆர்.லில்லி பேசியது:

தென்மேற்குப் பருவ மழையையொட்டி, தருமபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலர்களும் தங்களது துறை சம்பந்தமாக பேரிடர் மேலாண்மைத் திட்டம் குறித்தும், துறை அலுவலர்களின் முகவரி மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி, கைப்பேசி எண்கள் உள்ளிட்டவற்றை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

மேலும் கோட்ட, வட்டார அளவில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்கள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடத்த வேண்டும்.

மாவட்டத்தில் பேரிடர் மேலாண்மை, பேரிடர் தணிக்கும் வகையில் இயற்கை இடர்பாடுகளை உடனுக்குடன் மாவட்ட நிர்வாகத்துக்கும், அரசுக்கும் தெரியப்படுத்தும் வகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டுப்பாட்டு அறையை 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தகவல்களை தெரிவிக்கலாம்.

பருவ மழைக் காலங்களில் ஏற்படும் ஆபத்துகளிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு முன்னெச்சரிக்கை மாதிரி ஒத்திகைகளை பொதுமக்கள் கூடும் இடங்களில் நடத்த வேண்டும்.

நீர்த்தேக்கம், ஏரிகளில் தண்ணீர் நிரம்பும் தருணத்தில் உபரி நீர் வெளியேற்றக் கூடிய சூழ்நிலை வரும்போது அதை முன்கூட்டியே பொதுமக்களுக்கு அறிவித்தல், தாழ்வான பகுதியில் வசிப்பவர்களை மேடான பகுதியில் தங்க வைக்க ஏற்பாடு செய்தல், வெள்ளம் வரும் இடங்களில் தேவையான மணல் மூட்டைகளை தயார் நிலையில் வைத்தல், நீர்நிலைகளில் உள்ள

ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் விரைவாக மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) எச்.ரஹமத்துல்லாகான், வருவாய் கோட்டாட்சியர்கள் பி.மேனகா, எம்.சந்திரசேகரன், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் ச.ராமதாஸ் உள்ளிட்ட அனைத்துத் துறை அலுவலர்களும் பங்கேற்றனர்.

## நாமக்கல்லில் மிதமான மழையே பெய்யக்கூடும்

தென்மேற்குப் பருவமழை தமிழகத்தின் வடக்குத் திசையில் வலுவடைந்திருப்பதால், நாமக்கல் உள்ளிட்ட வடமேற்கு மாவட்டங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 3 நாள்களுக்கு (ஜூன் 5 முதல் ஜூன் 7 வரை) வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் சில இடங்களில் 2 மிமீ வரை மழை பெய்ய வாய்ப்புள்ளது. காற்றின் திசைவேகம் மணிக்கு 8 கிமீ முதல் 9 கிமீ வேகத்தில் மேற்கிலிருந்து வீசக்கூடும்.

வெப்பநிலை குறைந்தபட்சம் 75.2 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 96.8 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 43 சதம் முதல் அதிகபட்சம் 72 சதம் வரை இருக்கும்.

கோழிப் பண்ணையாளர்களுக்கு...: தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்து வடக்கு திசையில் அதன்தாக்கம் வலுவடைந்திருப்பதால் தமிழகத்தின் வடமேற்கு மண்டல மாவட்டங்களான நாமக்கல் உள்ளிட்ட பகுதிகளில் மிதமான மழை பெய்யக்கூடும். இதனால், குறைந்த வெப்ப அளவுகள் சற்று உயர்ந்து காணப்பட்டாலும் காற்றின் அதிகரித்த வேகத்தால் மாலையில் வெப்பம் குறையக்கூடும்.

காற்றின் வேகம் அதிகரிக்கக்கூடும் என்பதால் பண்ணைகளில் கோழிகளின் தீவனம் சற்றே விரயமடையக்கூடிய வாய்ப்புக்களும் உள்ளன. எனவே, உயர் மனைகளின் பக்கவாட்டில் படுதாவை 3 அடி உயரத்துக்கு பயன்படுத்த வேண்டும்.

வேளாண் விவசாயிகளுக்கு...: எதிர்பார்க்கப்படும் சிறு மழையைப் பயன்படுத்தி கால்நடைகளுக்குத் தேவையான தீவனப் பயிர்களான சிஓஎஃப்எஸ்-29 (ஒரு ஏக்கருக்கு வரிசை முறையில் 2 கிலோ அல்லது தெளிப்பு முறையில் நான்கு கிலோ), வேலிமசால் (ஏக்கருக்கு 8 கிலோ), நாட்டுச் சோளம் (ஏக்கருக்கு 20 கிலோ), தட்டைப் பயறு (ஏக்கருக்கு 10 கிலோ)

ஆகியவற்றை விதைப்பு செய்து குறைந்த நீரில் நல்ல மகசூல் பெற முடியும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்மேற்கு பருவமழை : அனைத்துப்பணிகளிலும் ஒத்துழைக்க வேண்டும்

தென்மேற்கு பருவமழையை எதிர்கொள்வது மற்றும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளிலும் அனைத்துத்துறையினரும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றார் ஆட்சியர் செ. மனோகரன்.

புதுக்கோட்டை ஆட்சியரகத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு தலைமை வகித்து மேலும் அவர் பேசியது:

புயல், வெ்ப்ளம் தொடர்பான அனைத்து பணிகளிலும் ஒத்துழைப்புடன் கூடிய உடனடித் தகவல்களை காவல்துறையினர் மாவட்ட நிர்வாகத்துடன் பரிமாறிக் கொள்ளவேண்டும். தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறை மாதிரிப் பயிற்சிகளை, ஒவ்வொரு வட்டம் மற்றும் வட்டார வாரியாக நடத்தி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அத்தியாவசியமான மருந்துகள், உயிர் காக்கும் மருந்துகள் ஆகியவை போதிய அளவு இருப்பு உள்ளதா என்பதை சுகாதாரத்துறையினர் அவ்வப்போது உறுதி செய்யவேண்டும். அத்தியாவசியமான உணவு தானியங்கள், மண்ணெண்ணெய், சாக்குபைகள் இருப்பு, பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு போன்ற விற்பனை நிலையங்களில் தேவையான அளவில் இருப்பில் வைக்கப்படுவதை நுகர்பொருள்வாணிபக்கழகமும், பள்ளிக்கட்டிடங்கள், சமுதாயக்கூடங்கள் மற்றும் கல்யாண மண்டபங்களை உடனடியாக தணிக்கை செய்து குடியமா த்த தகுதி வாய்ந்ததா என்பதை பொதுப்பணித்துறையினரும் உறுதி செய்ய வேண்டும். தேவையான அளவு மணல் மூட்டைகளை இருப்பு வைக்க வேண்டும். வெ்ப்ளத் தடுப்பு பணியில் ஈடுபடும் அனைத்துத்துறை வாகனங்கள் நல்லமுறையில் இயங்கு நிலையில் இருப்பதை மோட்டார் வாகனத்துறையினர் உறுதி செய்ய வேண்டும். பாலங்கள், சாலைகள் அமைப்போர் மற்றும் போக்குவரத்து அமைப்பாளர்கள் பட்டியலினை பராமரித்து அவசர காலங்களில் ஒருங்கிணைப்பு நடவடிக்கையில் பயன்படுத்த நெடுஞ்சாலைத்துறையினர் உதவ வேண்டும். பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகள் வெ்ப்ளம், புயல் தொடர்பான விழிப்புணர்வு தீர்மானங்களை கிராமசபை கூட்டத்தில் விவாதிக்க வேண்டும். சிறுபாசன குளங்கள், ஊருணிகள், ஏரிகள் திறந்தவெளி கிணறுகள் போன்றய உள்ளாட்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். வெ்ப்ள காலங்களில் கொள்ளை நோய்கள் பரவினால் அதை தடுக்க மருத்துவத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். புயல் வெ்ப்ள காலங்களில்

மின்தடை ஏற்படும்போது சீரமைக்கும் வகையில் உரிய பணியாளர்கள், மின்கம்பங்கள் மற்றும் இதர மின் சாதனங்களை மின்வாரியத்தினர் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

கடலோரக் கிராமங்களில் புயல் மழையால் மிகவும் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில், தேவையான முன்னெச்சரிக்கை உதவி இயக்குநர் (மீன்வளத்துறை) நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். உதவி இயக்குநர் (கால்நடைத்துறை ) புயல் வெப்ளக்காலங்களில் கால்நடை தீவனம் தேவையான அளவில் இருப்பு உள்ளதை உறுதி செய்யவேண்டும். மேலும் கொள்ளை நோய்கள் பரவாமல் தடுக்க சுகாதாரத்துறையினர் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றார்.

இதில், மாவட்ட வருவாய் அலுவலர் (பொறுப்பு) அன்பழகன், நேர்முக உதவியாளர்(பொது) .பிரசன்னராமசாமி, வருவாய் கோட்டாட்சியர்கள் சி.முத்துமாரி, க.துரை, துணை ஆட்சியர்கள், அனைத்துத்துறை அலுவலர்கள், வட்டாட்சியர்கள், கலந்து கொண்டனர்.

(பட விளக்கம்)

புதுக்கோட்டையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற புயல் வெள்ளம் தொடர்பான ஆலோசனைக்கூட்டத்தில் பேசுகிறார், ஆட்சியர் செ. மனோகரன்.(வலது). அனைத்துத்துறை அலுவலர்கள்(இடது)

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 18.88 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 18.88 அடியாக இருந்தது.

அணைக்கு வினாடிக்கு 473 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## ஜூலை 1 முதல் கயிறு தயாரிப்புப் பயிற்சி

தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் அருகே பிள்ளையார்பட்டியில் மத்திய அரசின்கீழ் கயிறு வாரியத்தின் மண்டல விரிவாக்க மையத்தில் கயிறு தயாரிப்புப் பயிற்சி ஜூலை 1-ம் தேதி முதல் வழங்கப்படவுள்ளது.

இதுகுறித்து கயிறு வாரிய மண்டல விரிவாக்க மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

இங்கு 6 மாத கால கயிறு கைவினைப் பயிற்சி வகுப்பு நடத்தப்படவுள்ளது. இதில், 18 வயது முதல் 45 வயதுக்கு உள்பட்ட இரு பாலரும் சேர்ந்து பயன் பெறலாம்.

இந்தப் பயிற்சிக்கு எழுத மற்றும் படிக்க தெரிந்திருக்க வேண்டும். பயிற்சியின் போது மாதம் ரூ. 750 உதவித்தொகை வழங்கப்படும். பயிற்சி பெறுபவர்களுக்கு விடுதி வசதி உண்டு. பயிற்சி வரும் ஜூலை 1ம் தேதி முதல் தொடங்கப்படும்.

இதில், சேருவதற்கான விண்ணப்ப படிவங்கள் அலுவலக நாள்களில் நேரில் அல்லது கடிதம் மூலமாக இலவசமாகப் பெற்று கொள்ளலாம். அல்லது

ஜ்ஜ்ஜ்.ஞ்ரீர்ண்ழ்ட்ர்ஹழ்க்.ஞ்ர்ஸ் என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை வளர்ச்சி அலுவலர், மண்டல விரிவாக்க மையம், பிள்ளையார்பட்டி, வல்லம் வழி, தஞ்சாவூர் என்ற முகவரிக்கு ஜூன் 17-ம் தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

## விவசாயப் பணியை பாதுக்காத்து,உற்பத்தியை பெருக்கிட சிறப்பு நடவடிக்கை வேண்டும். தமிழக முதல்வருக்கு,காங்கிரஸ் விவசாயிகள் பிரிவு கோரிக்கை.

தமிழக காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயப் பணிகளை பாதுகாத்திடவும்,உற்பத்தியினை பெருக்கிடவும் சிறப்பு நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என தமிழ்நாடு காங்கிரஸ் விவசாயிகள் பிரிவு வலியுறுத்தியுள்ளது.

இது பற்றி தமிழக முதல்வருக்கு,திங்கள்கிழமை அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில். மாநில காங்கிரஸ் விவசாயிகள் பிரிவு பொதுச் செயலர் நெடுவை டி.ராஜதுரை தெரிவித்திருப்பது: காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் சில ஆண்டுகளாக புயல்,மழை,வெள்ளம்,வறட்சி போன்ற இயற்கை இடர்பாடுகளால் விவசாயப் பணிகள் பாதிக்கப்பட்டதால் உற்பத்தியும் பெருமளவு குறைந்து விட்டது.இதனால் விவசாயிகள் மிகுந்த பொருளாதார நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளதுடன்,விவசாய தொழிலாளர்கள் வேலை தேடி வேறு மாவட்டங்களுக்கு குடும்பத்துடன் இடம் பெயர வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.இதனால் ஆழ்துளை வசதி உள்ள விவசாய நிலங்களில் பயிரிட முயன்றாலும்,விவசாய தொழிலாளர் பற்றா குறை காரணமாக விவசாயம் தொடர முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதால் குறுவை,சம்பா,தாளடி பயிரிடும் நிலப் பரப்பின் அளவு பாதியாக குறைந்து விட்டது.

கடந்தாண்டு பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை தமிழக அமைச்சரவை குழு பார்வையிட்டு சென்ற பின் தமிழக அரசு அறிவித்த இழப்பீட்டு தொகையான ரூ.15 ஆயிரம் எந்த

விவசாயிகளுக்கும் முழுமையாக கிடைக்காது.அதிகப்பட்சமாக ரூ.மூவாயிரம் மட்டுமே பெற்றுள்ளனர்.இது எந்த வகையிலும் பாதிப்பினை ஈடு செய்வதாக இல்லை.

தாங்கள் உச்ச நீதி மனறம் மூலம் சட்ட நடவடிக்கைகள் எடுத்ததால் தமிழக விவசாயிகளுக்கு பாதுகாப்பான நிலை ஏற்பட்டாலும்.இயற்கையின் சூழ்நிலையால் நிகழாண்டுக்கு குறுவை சாகுபடிக்கு தண்ணீர் கிடைக்குமா என்ற கவலை டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இதில் தமிழக முதல்வர் சிறப்பு கவனம் செலுத்தி மத்திய,கர்நாடக அரசுகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி சுமூகமான முடிவுனை எடுத்து விவசாயத்தை பாதுகாத்திடவும்,உற்பத்தியை பெருக்கிடவும் நடவடிக்கையினை எடுக்குமாறு,விவசாயிகளை ஊக்கப்படுத்திடும் வகையில் தேவையான அளவு விதை நெல்,உரம்,இடுப்பொருள்களை மான்ய விலையில் வழங்கிடவும்.தடையின்ற மும்முனை மின்சாரம் விநியோகம் செய்திடவும்,வேளாண்மை கூட்டுறவு வங்கியில் கடன் பெற்றிடவும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவு பிரப்பித்திட வேண்டும் என அதில் குறிப்பிட்டுள்ளார்.

## மழை நீரைச் சேமிக்க விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்

மழை நீரை சேமிக்க வேண்டும் என்று கர்நாடக விவசாயிகளுக்கு நீர் நிலவியல் நிபுணர் என்.ஜெ.தேவராஜ ரெட்டி அறிவுறுத்தினார்.

கர்நாடக அரசு வேளாண் துறையின் வேளாண் தொழில்நுட்ப மையம் சார்பில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்ற ஆழ்துளைக் கிணறுகளை மேம்படுத்துவது குறித்த கருத்தரங்கு பெங்களூரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கருத்தரங்கை மையத்தின் தலைவர் கே.வி.சர்வேஸ் தாடக்கிவைத்தார். நீர் நிலவியல் நிபுணர் என்.ஜே.தேவராஜ ரெட்டி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசியது:

கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பு ஆறுகள், அணைகள், ஏரிகள், கிணறுகள் உள்ளிட்டவை வேளாண் பணிகள், குடிநீருக்கான ஆதாரமாக திகழ்ந்தன.

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியாலும், மக்களின் வாழ்க்கை முறை மாற்றத்தாலும், மழை குறைந்து தற்போது நிலத்தடி நீர் மட்டுமே வேளாண் பணிகளுக்கும், குடிநீருக்குமான ஆதாரமாக உள்ளது.

இது ஆழ்துளைக் கிணறுகள் மூலமாகவே வெளியே எடுக்கப்படுகிறது. நிலத்தடி நீரை மட்டுமே நாம் நம்பி இருப்பதால், அதன் மட்டம் நாளுக்குநாள் குறைந்து கொண்டே வருகிறது. பல

இடங்களில் சுமார் 90 சத ஆழ்துளைக் கிணறுகள் வறண்டுவிட்டன. இதே நிலை நீடித்தால் மக்கள் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும்.

நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் விதமாக, ஆழ்துளைக் கிணறுகளை அமைக்க பல மாவட்டங்களில் அரசு தடை விதித்துள்ளது. ஆழ்துளைக் கிணறுகள் வறண்டு போவதைத் தடுக்கவும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும் மழை நீரை சேமிக்க வேண்டும்.

அதற்கான தொழில்நுட்பம் தற்போது உள்ளது. ரூ.25 ஆயிரம் செலவில் அந்தத் தொழில்நுட்பத்தை செயல்படுத்தினால் ஆழ்துளைக் கிணறுகள் வறண்டு போகாது. மழை நீர் வெள்ளமாக வெளியேறி, வீணாவதும் குறையும் என்றார் அவர்.

வேளாண் தொழில்நுட்ப மையத்தின் துணைத் தலைவர் டி.ராஜகோபால், செயலர் கே.ஜே.தேவேந்திரப்பா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ஏற்காட்டில் 60 மி.மீ. மழை: தமிழகத்தில் இன்றும் மழை வாய்ப்பு

தமிழகத்தின் ஓரிரு இடங்களில் மழையோ இடியுடன் கூடிய மழையோ புதன்கிழமை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை கடந்த சில தினங்களுக்கு முன்பு தொடங்கியதைத் தொடர்ந்து கேரளம் மற்றும் கடலோர கர்நாடகத்தின் பல இடங்களில் கனமழை பெய்து வருகிறது. இப்போது பருவமழை உள்புற கர்நாடகம், தெலங்கானா, கடலோர ஆந்திரம், ராயலசீமா ஆகிய பகுதிகளுக்கும் பரவியுள்ளது.

தென்மேற்கு பருவமழை மூலம் தமிழகத்துக்கு மழை கிடைக்காது என்றபோதும், வெப்பச்சலனத்தின் காரணமாகவும், பருவமழை தாக்கத்தாலும் ஓரிரு இடங்களில் மழை பெய்து வருகிறது. ஏற்காட்டில் செவ்வாய்க்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் 60 மி.மீ. மழை பெய்துள்ளது.

தமிழகத்தில் பெய்த மழை அளவு (மில்லி மீட்டரில்): ஏற்காடு - 60, தேவலா - 20, சின்னக்கல்லாறு, வால்பாறை, பரங்கிப்பேட்டை, நடுவட்டம், குழித்துறை, குளச்சல், மணிமுத்தாறு, வாலாஜா - 10.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகம் மற்றும் புதுவையின் ஓரிரு இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ புதன்கிழமை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையை பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் மழையோ, இடியுடன் கூடிய மழையோ பெய்யும்.

8 இடங்களில் 100 டிகிரி வெயில்: சில இடங்களில் மழை பெய்து வந்தாலும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் 100 டிகிரிக்கு மேல் வெயில் பதிவாகியுள்ளது. அதிகபட்சமாக மதுரையில் செவ்வாய்க்கிழமை 103 டிகிரி வெயில் பதிவாகியுள்ளது.

பிற இடங்களில் பதிவான வெயில் அளவு (டிகிரி பாரன்ஹீட்டில்): திருச்சி, நாகப்பட்டினம் - 102, அதிராமப்பட்டினம், கடலூர், காரைக்கால், கரூர் பரமத்தி, புதுச்சேரி, தூத்துக்குடி - 101, சென்னை நுங்கம்பாக்கம், பாளையங்கோட்டை - 99, வேலூர் - 98, சேலம் - 97, சென்னை மீனம்பாக்கம் - 96, தருமபுரி - 94, கோவை - 91.

## தோல் முதல் விதை வரை பலன் தரும் பப்பாளி



பப்பாளியில் வைட்டமின் ஏ, பி, சி, ரிபோ பாப்பைன் என்சைம், கால்சியம், இரும்பு, பாஸ்பரஸ், பொட்டாசியம், வைட்டமின் இ மற்றும் கே ஆகியவை நிறைந்துள்ளன.

மூட்டுவலி உள்ளவர்களுக்கும், உடல் எடையை குறைக்க விரும்புபவர்களுக்கும் நீரிழிவு நோயாளிகளுக்கும், கண் பார்வையை அதிகரிக்க நினைப்பவர்களுக்கும் பப்பாளி பழம் நல்லது.

கர்ப்பிணிப் பெண்கள் முதல் 2 மாதங்களுக்கு பப்பாளி பழம் சாப்பிடுவதை தவிர்க்கவும்.

சருமத்தில் சுருக்கம் விழாமல் பாதுகாக்கும், குடல் பூச்சிகளைச் அழித்து சுத்தம் செய்யும் சக்தி பப்பாளிக்கு உள்ளது.

பப்பாளி பழத்தை அடிக்கடி குழந்தைகளுக்கு கொடுத்து வர உடல் வளர்ச்சி துரிதமாகும். எலும்பு வளர்ச்சி, பல் உறுதி ஏற்படும்.

பப்பாளிக் காயை கூட்டாக செய்து உண்டு வர குண்டான உடல் படிப்படியாக மெலியும். தொடர்ந்து பப்பாளிப் பழத்தை சாப்பிட்டு வர கல்லீரல் வீக்கம் குறையும்.

பப்பாளிப் பழத்தை தேனில் தோய்த்து உண்டு வர நரம்புத் தளர்ச்சி குறையும்.

பப்பாளியை தேன் கலந்து முகத்தில் பூசி, ஊறிய பின் சுடுநீரால் கழுவி வர முகச்சுருக்கம் மாறி, முகம் அழகு பெறும்.

பப்பாளி விதைகளை அரைத்து பாலில் கலந்து சாப்பிட நாக்குப்பூச்சிகள் அழிந்து விடும்.

பப்பாளிக் காயின் பாலை வாய்ப்புண், புண்கள் மேல் பூச புண்கள் ஆறும்.

பப்பாளிப் பாலை, பசும்பாலுடன் கலந்து சேற்றுப் புண்கள் மேல் தடவி வர புண்கள் ஆறும்.

பப்பாளிப் பாலை குழந்தைகளின் தலையில் ஏற்படும் புண்களில் பூசி வர புண்கள் ஆறும்.

பப்பாளி இலைகளை அரைத்து கட்டி மேல் போட்டு வர கட்டி உடையும்.

பப்பாளி இலைகளை பிழிந்து எடுத்து வீக்கங்கள் மேல் பூசி வர வீக்கம் கரையும்.

பப்பாளி விதைகளை அரைத்து தேள் கொட்டிய இடத்தில் பூச வலி, விஷம் இறங்கும்.

பப்பாளிக் காய் குழம்பை, பிரசவித்த பெண்கள் உணவில் சேர்த்து வர பால் சுரப்பு கூடும்.

உடலில் உள்ள அதிக கொழுப்பைக் குறைக்கும் சக்தி பப்பாளிக்கு உள்ளது.

தோளில் ஏற்படும் தொற்றுக்களுக்கும், காயங்களுக்கும் பப்பாளி சிறந்த மருந்தாக உள்ளது. அடிபட்ட இடத்தில் பப்பாளிப் பழச் சாறை தடவினால், வீக்கத்தைக் குறைக்கலாம்.

5 மாதத்தைக் கடந்த கர்ப்பிணிப் பெண்கள், சிறிய துண்டு பாப்பாளிப் பழத்தை சாப்பிட்டு வந்தால் மந்தத் தன்மை குணமடையும்.

தலையில் ஏற்படும் பொடுகுத் தொல்லைக்கு பப்பாளி சிறந்த மருந்தாக உள்ளது. பப்பாளி கலந்த ஷேம்புக்களையும் பயன்படுத்தலாம்.

பெண்களுக்கு ஏற்படும் முறையற்ற மாதவிடாய் பிரச்னைகளுக்கு பப்பாளிக் காய் நல்ல பலன் தரும்.

வயிறு மற்றும் ஜீரண உறுப்புகளில் படிந்துள்ள கழிவுகளை அகற்ற பப்பாளி அருமருந்தாகும். வெறும் வயிற்றில் தொடர்ந்து 3 அல்லது 4 நாட்களுக்கு பப்பாளி சாப்பிட்டால், குடலில் உள்ள அனைத்துக் கழிவுகளும் அகற்றப்படும்.

அடிக்கடி சளி, இரும்பல், காய்ச்சல் வந்து அவதிப்படுபவர்கள் பப்பாளிப் பழம் சாப்பிட்டால், இயற்கையாகவே உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து இதுபோன்ற பாதிப்புகளில் இருந்து தப்பிக்கலாம்.

பப்பாளி பழத்தின் தோல் முதல் விதை வரை அனைத்துமே மருத்துவ குணங்கள் கொண்டதாக உள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

05.06.2013 A.M

## விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் ஜூன் 10 வரை

ராமநாதபுரம்:கலெக்டர் நந்தகுமார் அறிக்கை: ராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மூலம் மே 15ம் தேதி முதல் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை நிவாரணம் பெறாத விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை ஜூன் 10ம் தேதி வரை மட்டுமே சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கப்படும். ஜூன் 10ம் தேதிக்கு பின், நிவாரணத் தொகை ராமநாதபுரம் மத்திய கூட்டுறவு வங்கியில் திரும்ப ஒப்படைக்கப்படும், என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நெல்லையில் குறுகிய கால மரம் வளர்ப்பு பயிற்சி முகாம்

திருநெல்வேலி : செப்பறை வலபூமி பசுமை உலகம் அமைப்பு சார்பில் நெல்லையில் குறுகிய கால மரம் வளர்ப்பு இலவச பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இதுகுறித்து செப்பறை வலபூமி பசுமை உலகம் அமைப்பு அமைப்பாளர் அர்ஜூனன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: நெல்லை ராஜவல்லிபுரம் செப்பறை வலபூமி பசுமை உலகம் அமைப்பு சார்பில் சுற்றுச் சூழல் நலனை பாதுகாக்கவும், மழை செழிக்கவேண்டியும் குறுகிய கால மரம் வளர்ப்பு பயிற்சி தமிழகம் முழுவதும் அளிக்கப்பட்டு வருகிறது. மரக்கன்றுகளை நட்டு, 2 ஆண்டுகளில் வளரக்கூடிய மரங்களை, மரத்தின் கிளைகளை வெட்டி வைத்து வளர்த்து 90 நாட்களில் அதை மரமாக வளர்க்கும் குறுகிய கால மரம் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. தன்னார்வமிக்க அமைப்புகள், தன்னார்வ இளைஞர்கள், பொது நல அமைப்புக்கள், சுய உதவிக்குழுக்களுக்கு இலவசமாக பயிற்சி அளிக்கப்படும்.குறுகிய கால மரம் வளர்ப்பு திட்டத்தில் வேலையாட்கள், தண்ணீர் குறைவாகவே பயன்படுத்துதல் போதுமானது. ஆலமரம், அத்தி, கல் அத்தி, வாகை மரம், உசிலை, பூவரசு ஆகிய மரத்தின் கிளைகளை வெட்டி வைத்து குறுகிய காலத்தில் மரமாக வளர்க்க முடியும். இந்த மரங்கள் மழையை வரவழைக்கும் தன்மை கொண்டவை. பள்ளி, கல்லூரிகள், பொது இடங்கள், பஞ்., பகுதிகள், கோயில்களில் மரங்களை வளர்க்க விரும்புவோருக்கும் பயிற்சி அளிக்கப்படும். இந்த பயிற்சியை பெற விரும்புவோர் செப்பறை வலபூமி பசுமை உலகம் அமைப்பாளர் அர்ஜூனனை 97903-95796 என்ற நம்பரில் தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அணைக்கு நீர் வரத்து அதிகரிப்பு

கிருஷ்ணகிரி: ஓசூர் அடுத்த கெலவரப்பள்ளி அணையில் இருந்து, வினாடிக்கு, 850 கன அடிநீர் திறந்துவிடப்பட்டுள்ளதால், கிருஷ்ணகிரி அடுத்த கே.ஆர்.பி., அணை வேகமாக நிரம்ப வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கர்நாடகா மாநிலத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் ஓசூர் அடுத்த கெலவரப்பள்ளியில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டடப்பட்டுள்ள அணைக்கு நீர் வரத்து தொடர்ந்து அதிகரித்துள்ளது. அணையின் மொத்த நீர்மட்டம், 44 அடியாகும். தற்போது, 42 அடி நீர் உள்ளது. நேற்று காலை நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு, 840 கன அடிநீர் வந்தது. அணையில் இருந்து, 800 கன அடிநீர் தென்பெண்ணை ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது. இந்த நீர் விரைவில் கிருஷ்ணகிரி அடுத்த கே.ஆர்.பி., அணைக்கு வந்து சேரும் என்பதால் கே.ஆர்.பி., அணை வேகமாக நிரம்பும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அணையில், 34 கனஅடிநீர் உள்ளது. அணையின் மொத்த நீர்மட்டம், 52 அடியாகும்.

## "சதம்' அடித்த சின்ன வெங்காயம் விலை

சத்தியமங்கலம்: சத்தியமங்கலத்தில் நேற்று சின்னவெங்காயம் ஒரு கிலோ, 100 ரூபாய்க்கு விற்பனையானது. இதனால் ஹோட்டல்களில் சின்னவெங்காயம் பயன்படுத்துவது நிறுத்தப்பட்டுள்ளது.

சத்தியமங்கலம் பகுதியில் விவசாயிகள் மஞ்சள் அதிகம் பயிரிடுவது வழக்கம். கடந்த இரண்டு ஆண்டுகளாக மஞ்சள் விலை குறைந்ததால் மஞ்சள் பயிடும் பரப்பளவு, 50 சதவீதம் குறைந்தது. தமிழகம் மட்டுமின்றி கர்நாடகா மாநிலத்திலும் மஞ்சள் பயிரிட்டுள்ள விவசாயிகள் எண்ணிக்கை குறைந்துள்ளது.

பொதுவாக மஞ்சள் பயிருக்குள் ஊடுபயிராக சின்னவெங்காயம் பயிரிடுவார்கள். இதனால் சத்தியமங்கலம் பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் சின்னவெங்காயத்தின் உற்பத்தி அதிகமாக இருக்கும். இதனால் இதன் விலையும் கட்டுப்பாட்டில் இருந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளாக இதன் உற்பத்தி குறைந்ததால், சின்னவெங்காயத்தின் விலை தங்கம்போல் நாளுக்கு நாள் உயர தொடங்கியது.

இதனால் கடந்த ஆறு மாதமாக சின்னவெங்காயம் நாளுக்கு நாள் விலை அதிகரித்தது. கடந்த வாரம் சத்தியமங்கலம் பகுதியில் ஒரு கிலோ சின்னவெங்காயம், 60 ரூபாய்க்கு விற்பனையானது. இந்த விலை தற்போது அதிகரித்து ஒரு கிலோ சின்னவெங்காயம், 100 ரூபாய்க்கு விற்பனையானது. ஈரோட்டில், 85 ரூபாய்க்கு விற்பனையானது.

பெண்கள் சமையலுக்கு சின்னவெங்காயத்துக்கு மாற்றாக பெரிய வெங்காயத்தை பயன்படுத்த தொடங்கி விட்டனர். இதேபோல் ஹோட்டல் கடைகளில் சாம்பாரில் மொட்டு, மொட்டா க காணப்படும் சிறிய வெங்காயம் இப்போது இல்லை. சின்னவெங்காயத்தை மொத்தமாக

பயன்படுத்துவது நிறுத்திவிட்டு, அதற்கு பதிலாக பெரியவெங்காயத்தை பயன்படுத்துவதாக, ஹோட்டல் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

## விவசாயிகளுக்கு உழவர் பாதுகாப்பு அட்டை ஆறு லட்சம் பேருக்கு வழங்க நடவடிக்கை

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில், ஆறு லட்சம் விவசாய தொழிலாளர்களுக்கு இரு வண்ணத்தில், உழவர் பாதுகாப்பு அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கடந்த, 2011ம் ஆண்டு முதல்வரின் உழவர் பாதுகாப்பு திட்டம் துவங்கப்பட்டது. விவசாய தொழிலாளர்கள், குறு மற்றும் சிறு விவசாயிகள், இத்திட்டத்தின் மூலம் உறுப்பினர்களாகி பயனடைந்து வருகின்றனர்.

உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு உயர்கல்வித் தொகை, திருமண உதவித் தொகை, இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை, விபத்து மற்றும் காயத்துக்கான உதவித் தொகை, முதியோர் உதவித் தொகை, கிட்னி பாதிப்பு, உயிர்கொல்லி நோய், புற்றுநோய் பாதிப்பு உள்ளவர்களுக்கு உதவித்தொகை ஆகியவை வழங்கப்படுகிறது.

இதற்காக, ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும், "மெரூன்' கலரில் தற்காலிக அடையாள வழங்கப்பட்டது. அதில், குடும்ப உறுப்பினர்கள் பெயர் சேர்த்தல், பிழைத் திருத்தங்கள் உள்ளிட்ட பணிகளை செய்ய, சம்பந்தப்பட்ட வி.ஏ.ஓ.க்கள் மூலமாக மறு கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இந்நிலையில், பாதுகாப்பான அடையாள அட்டை வழங்குவதற்கான, பணிகளை சமூக பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தீவிரப்படுத்தியுள்ளனர். ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஆறு தாலுகாவிலும், ஆறு லட்சம் பேர், உழவர் பாதுகாப்பு திட்டத்தில் பதிவு செய்துள்ளனர்.

இதில், 1.64 லட்சம் உறுப்பினர்கள், உறுப்பினர்களை சார்ந்த குடும்ப உறுப்பினர்கள் உள்ளனர். உறுப்பினர்களுக்கு, "மெரூன்' கலர் அட்டையும், உறுப்பினர் அல்லாத சார்ந்த உறுப்பினர்களுக்கு, "கிரே' கலர் அட்டையும் வழங்க அரசு உத்தரவிட்டது. இரு வண்ணத்தில் வழங்கப்படும், புதிய அட்டையை தயாரிப்பதற்கான பணிகளும் துவங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சமூகபாதுகாப்பு திட்ட அலுவலர்கள் கூறியதாவது:

இரு வண்ணத்தில், உழவர் பாதுகாப்பு அட்டை வழங்குவதற்கான பணிகள் துவங்கப்பட்டுள்ளது. அட்டைகள் தயாரிப்பதற்கான பணிகள் "எல்காட்' நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஈரோட்டில், அட்டை தயாரிப்பதற்கான வசதிகள் இல்லை என்பதால், சேலத்தில் உள்ள, "எல்காட்' நிறுவனத்திடம் உறுப்பினர்கள் விபரங்கள் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம், புதிய அட்டை தயாரிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட வி.ஏ.ஓ.,க்கள் மூலமாக, விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களுக்கு வழங்கப்படும், என்றனர்.

## பசுந்தேயிலைமகசூல் அதிகரிப்பு

கோத்தகிரி:கோத்தகிரி பகுதியில் பரவலாக மழைப் பெய்துள்ள நிலையில், தேயிலை தோட்டங்களில் பசுந்தேயிலை மகசூல் அதிகரித்துள்ளது.

கடந்த சில நாட்களாக கோத்தகிரி சுற்றுவட்டார பகுதிகளில் ஓரளவு மழைப் பெய்து வருகிறது. இதனால், காய்ந்து கிடந்த தேயிலைச் செடிகளில் அரும்புகள் துளிர்விட துவங்கியுள்ளன. தவிர, வறட்சி காரணமாக சிவப்பு சிலந்தி நோயால் பாதிக்கப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான ஏக்கர் தேயிலை தோட்டங்கள், பழைய நிலைக்கு திரும்பி வருகிற சாசரியான பசுந்தேயிலை கிலோ ஒன்றுக்கு தற்போது 18 ரூபாய் குறையாமல் விலை கிடைத்துவருவதால், தோட்டங்களை பராமரிப்பதில் விவசாயிகள் கூடுதலாக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இனிவரும் நாட்களில், தொடர்ந்து மழை பெய்யும் பட்சத்தில், தேயிலை தோட்டங்களில் பசுந்தேயிலை மகசூல், மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். உரமிடுவதற்கு ஏதுவான ஈரம், விவசாய நிலங்களில் இல்லாததால், விவசாயிகள் உரமிடுவதில் தயக்கம் காட்டி வருகின்றனர்.

## பருவ மழை காலம்ஆலோசனை கூட்டம்

நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை காலத்தில் ஏற்படும் இன்னல்களை தடுப்பதற்கான, ஆலோசனை கூட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. இதில், அரசு அதிகாரிகள் மேற்கொள்ள வேண் டிய முன் நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை துவங்கப்பட்டது. மழைகாலங்களில் ஏற்படும் சேதங்களை குறித்து 1077, என்ற இலவச தொலைபேசி எண்ணிற்கு அல்லது 0423- 2444016, என்ற எண்ணிற்கு பொதுமக்கள் தகவல்களை தெரிவிக்கலாம். அதுமட் டும் இன்றி, ஒவ்வொரு தாலுகா அலுவலகங்களிலும், பேரிடர் மேற்கொள்வதற்கான கட்டுப்பாட்டு அறைகள் துவங்கப்பட்டுள்ளன. இக்கட்டுப்பாட்டு அறைகள் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகின்றன. ஊட்டி தாலுக்கா அலுவலகம் கட்டுப்பாட்டு அறை 0423-2442433, குன்னூர் 0423-2206102, கோத்தகிரி 04266-271718, குந்தா-0423-2508123, 04262-261252 என்ற எண்ணில் மக்கள் எப்போது வேண்டுமானாலும் தொடர்பு கொள்ளலாம்.

## வறட்சி நிவாரணம் வழங்கலில் வெள்ளியணை புறக்கணிப்பு

கரூர்: வறட்சி நிவாரணம் வழங்குவதில் கரூர் மாவட்டம் வெள்ளியணை சுற்று வட்டார பகுதி புறகணிக்கப்பட்டதாக, தமிழ்நாடு விவசாயி சங்கம் சார்பில், நேற்று கலெக்டர் அலுவலகத்தில் நடத்த குறைதீர் கூட்டத்தில், கலெக்டர் ஜெயந்திடம் விவசாயிகள் மனு அளித்தனர். அதில் கூறியதாவது: தமிழக அரசின் சார்பில், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. இதில், வெள்ளியணை, ஜெகதாபி, பிச்சம்பட்டி ஆகிய பகுதிகள் வறட்சி நிவாரணம் வழங்காமல் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இங்கு

ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள், பல ஆயிரம் ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்து வந்தனர். ஆனால் வறட்சியின் காரணமாக, பயிரிடப்பட்ட பயிர்கள் தண்ணீர் இல்லாமல், காய்ந்து போய் உள்ளது. ஆனால், வருவாய் மற்றும் வேளாண் துறையினர் வறட்சியால் பாதிக்கப்பட்ட, இப்பகுதி நிலம் குறித்து, விபரங்களை அளிக்கவில்லை. எனவே, விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் கிடைக்கவில்லை. மாவட்ட நிர்வாகம் தலையீட்டு, உரிய நிவராணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முந்திரி பயிருக்கு வறட்சி நிவாரணம் வழங்க கலெக்டரிடம் கோரிக்கை

அரியலூர்: அரியலூர் கலெக்டர் அலுவலகத்தில் நடந்த மக்கள் குறைதீர்நாள் கூட்டத்தில், மக்கள் சார்பில், ஆண்டிமடம் வட்டார விவசாயிகள் சங்க தலைவர் ஜெயச்சந்திரன், மேலநெடுவாய் ராஜேஷ், மணிகண்டன், கவுன்சிலர் ஜவஹர்லால் உள்ளிட்டோர், கலெக்டரிடம் கொடுத்த கோரிக்கை மனு: ஆண்டிடம் ஒன்றியத்தில் நான்கு ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் முந்திரி சாகுபடி செய்யப்படுகிறது. இந்தாண்டு ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக, முந்திரி விளைச்சல் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. இந்த முந்திரி பயிர் தான் இப்பகுதி மக்களின் வாழ்வாதாரமாக உள்ளது. இது ஆண்டு பயிர் என்பதால், அடுத்த ஆண்டு வரை இப்பகுதியிலுள்ள முந்திரி விவசாயிகளின் வாழ்வு கேள்விக்குறியாகி உள்ளது. இதுபற்றி முதல்வரின் தனிப்பிரிவுக்கு மனு அனுப்பியுள்ளோம். அரியலூர் மாவட்டத்தில் தான் அதிகளவு முந்திரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஆனால், உற்பத்தி திறனில் கடைசியாக உள்ளது. எனவே, இப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு, முந்திரி விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் பெற்று தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## இருப்பு குறைவாக உள்ளதால் ரேஷனில் உளுத்தம்பருப்பு வினியோகம் அம்போ?

நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளில், 3,000 டன் உளுத்தம் பருப்பு மட்டுமே, கையிருப்பாக உள்ளது. இதனால், இந்த மாதம் ரேஷன் கடைகளில், உளுத்தம் பருப்பு வினியோகிக்கப்படுமா என்பது, கேள்விக்குறியாகி உள்ளது.தமிழகத்தில், சிறப்பு பொது வினியோகத் திட்டத்தின் கீழ், ரேஷன் கடைகளில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியவை, 1 கிலோ, 30 ரூபாய் விலையில், விற்பனை செய்யப்படுகிறது.
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், ரேஷன் கடைகளுக்கு தேவையான உணவுப் பொருட்களை கொள்முதல் செய்கிறது. தமிழகத்தில், பொது வினியோக திட்டத்தின் கீழ் வினியோகிக்க, மாதம் ஒன்றுக்கு, 8,250 டன் உளுத்தம் பருப்பு தேவைப்படுகிறது.
பருப்பு வகைகள் கொள்முதலுக்கான, "டெண்டர்' இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகிறது.

கடந்த மாதம், 9ம் தேதி, 11 ஆயிரம் டன் உளுத்தம் பருப்பு கொள்முதலுக்கான டெண்டர் நடந்தது. இதில், நிறுவனங்கள் கோரிய விலை அதிகம் என்று கருதி கடந்த, 29ம் தேதி, டெண்டர் ரத்து செய்யப்பட்டது.இந்நிலையில், 11 ஆயிரம் டன் உளுத்தம் பருப்பு கொள்முதலுக்கான மறு டெண்டர், நடக்க உள்ளது. இதில், நிறுவனங்கள் கோரும் விலைப்புள்ளி தேர்வு செய்யப்படுமா அல்லது மீண்டும் டெண்டர் ரத்து செய்யப்படுமா என்பது, குழப்பமாக உள்ளது.தற்போது, நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளில், ரேஷனில் வினியோகிக்க, உளுத்தம் பருப்பு கையிருப்பு, 3,000 டன் மட்டுமே உள்ளது. இது, இம்மாதத்திற்கான தேவையை காட்டிலும் குறைவாகும். இதனால், இந்த மாதம் ரேஷன் கடைகளில் சிக்கலின்றி உளுத்தம் பருப்பு வினியோகிக்கப்படுமா என்பது கேள்விக்குறியாக உள்ளது.இதுகுறித்து, உணவு துறை உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது:டெண்டரில் பங்கேற்ற நிறுவனங்கள், 1 கிலோ உளுத்தம் பருப்புக்கு, 50 ரூபாய் வரை கோரின. நிதித் துறை செயலகம், விலை அதிகம் எனக்கருதி, டெண்டரை ரத்து செய்தது.கடந்த, 20 நாட்களில், உளுத்தம் பருப்பு விலை குறைந்திருக்கும் என, எதிர்பார்க்கப்பட்டது; இதனால், உளுத்தம் பருப்பு கொள்முதலுக்கான டெண்டரில் சிக்கல் இருக்க வாய்ப்பில்லை.இவ்வாறு, அவர் கூறினார்.

## ரூ.30 லட்சத்துக்கு பருத்தி விற்பனை

ஆத்தூர்: ஆத்தூர் புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், 30 லட்சம் ரூபாய்க்கு பருத்தி விற்பனையானது.

ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரந்தோறும் பருத்தி, மஞ்சள், தானியம் மற்றும் எண்ணெய் வித்துகள் ஏலம் நடந்து வருகிறது. ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, சின்னசேலம், கள்ளக்குறிச்சி, பெரம்பலூர் பகுதியில் இருந்து, 152 விவசாயிகள், 2,200 பருத்தி மூட்டைகளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

அதன்படி, பி.டி., ரக பருத்தி குவிண்டால் அதிகபட்சம், 5,319 ரூபாய், குறைந்தபட்சம், 4,869 ரூபாய், டி.சி.ஹெச்., ரக பருத்தி அதிகபட்சம், 5,379 ரூபாய், குறைந்தபட்சம், 4,900 ரூபாய் என, விற்பனையானது. 2,200 பருத்தி மூட்டைகள், 30 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

## சேலத்தில் கடும் வறட்சி எதிரொலி சாகுபடி பரப்பு 5,000 ஹெக்டர் சரிவு

சேலம்: சேலம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக, நடப்பாண்டில் பயிர் சாகுபடி பரப்பளவு, 5,000 ஹெக்டர் வரை சரிவடைந்துள்ளது. சேலம் மாவட்டத்தில், கடந்த ஆண்டு மலைதோட்டப்பயிர்கள், தோட்டப்பயிர்கள், பழப்பயிர்கள், மருத்துவ பயிர்கள், காய்கறிகள் மற்றும் மலர்ச்செடிகள் என, 55 ஆயிரம் ஹெக்டரில் பயிர் சாகுபடி செய்யப்பட்டது.

இந்தாண்டு, கடும் வறட்சி காரணமாக, சாகுபடி பரப்பு, 50 ஆயிரம் ஹெக்டராக சரிந்துள்ளது. சேலம் மாவட்டத்தில் ஏற்காடு, கல்வராயன் மலைப்பகுதிகளில், 6,000 ஹெக்டரில் காபி பயிரிடப்படுகிறது. இங்கு, மரவள்ளிக்கிழங்கு, கரும்பு மற்றும் நெல் உள்ளிட்டவை முக்கிய பயிராக உள்ளன. இந்த ஆண்டு ஹோலியாஸ் உள்ளிட்ட மருத்துவ பயிர், 1,000 ஹெக்டரில் பயிரிடப்படுகின்றன. காய்கறிகளில் தக்காளி, கத்திரி, வெண்டை, மிளகாய் மற்றும் கொடிகாய்களும், மா, வாழை போன்றவையும் அதிகளவில் பயிரிடப்படுகின்றன.
மலர்ச்செடிகளில் சாமந்திப்பூ, 1,500 ஹெக்டரும், அரளி, 1,000 ஹெக்டரும், மல்லிகை, ஜாதி மற்றும் முல்லை போன்றவை, 700 ஹெக்டரும் பயிரிடப்படுகிறது. ஒட்டுமொத்தமாக வாழப்பாடி, தாரமங்கலம், ஒமலூர், பனமரத்துப்பட்டி, ஆத்தூர், மேட்டூர், இடைப்பாடி உள்ளிட்ட சேலம் மாவட்டபகுதிகளில் பயிர் சாகுபடி பரப்பு, 50 ஆயிரம் ஹெக்டராக சரிந்துள்ளது.
இதுகுறித்து சேலம், தோட்டக்கலைத்துறை அதிகாரி கணேசன் கூறியதாவது:
சேலத்தில் விவசாய பயிர் சாகுபடி பரப்பளவு கடந்தாண்டை விட, நடப்பாண்டில், 5,000 ஹெக்டர் வரை குறைந்துள்ளது. 2012-13ம் ஆண்டில், ஒரு கோடியே, லட்சத்து, 5,000 நிதி ஒதுக்கீட்டில், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், துல்லிய பண்ணையம், உயர் தொழில்நுட்பத்தில் உற்பத்தியை அதிகரித்தல், பந்தல் காய்கறி சாகுபடி, தோட்டக்கலையில் இயந்திரங்களின் பயன்பாடு, தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய நுண்ணீர் பாசன இயக்கம் மற்றும் தேசிய மருத்துவ பயிர்கள் இயக்கம் சாகுபடி இலக்கு எட்டப்பட்டது.
அதே போல், தோட்டக்கலைத்துறையில் இயந்திரங்களின் பயன்பாட்டிற்கு கடந்தாண்டு, 35 லட்சத்து, 10 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.
நடப்பாண்டில், 56 லட்சம் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. பயிர் சாகுபடி பரப்பளவை அதிகரிக்கும் வகையில், நடப்பாண்டில், ஒரு கோடியே, 46 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் திட்டப்பணிகளை செயல்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### மக்காச்சோள சாகுபடி ஜூன் 11ல் பயிற்சி

நாமக்கல்: "வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும், 11ம் தேதி மக்காச்சோள சாகுபடி குறித்த பயிற்சி முகாம் நடக்க உள்ளது' என, அதன் ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:
நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும், 11ம் தேதி சோளம், மக்காச்சோளம் மற்றும் சிறுதானியப் பயிர் சாகுபடி குறித்த ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்க உள்ளது. பயிற்சியில் மக்காச்சோளம், சிறுதானியப் பயிர் சாகுபடியின் முக்கியத்துவம், அதில் உள்ள சத்து ரகம், வீரிய ஒட்டு ரகம், மண் பரிசோதனை, உர நிர்வாகம் போன்ற பல்வேறு தலைப்புகளில் இலவச பயிற்சி

அளிக்கப்பட உள்ளது.
பயிற்சி முகாமில் விவசாயிகள் உட்பட அனைத்து தரப்பினரும் பங்கேற்கலாம். பயிற்சியில் பங்கு பெற விரும்புவோர் மோகனூர் சாலையில் உள்ள நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் அல்லது, 04286 - 266345, 266244, 266650 ஆகிய ஃபோன் எண்களை தொடர்பு கொண்டு பெயர் பதிவு செய்து கொள்ள வேண்டும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## அதிகாரிகள் தீவிர விசாரணை ரேஷன் அரிசி கொள்முதல் திடீர் உயர்வு

நாமக்கல்: நாமக்கல் மாவட்டத்துக்கு, ஐந்து சதவீதம் கூடுதலாக அரிசி கொள்முதல் செய்து, வினியோக்கிப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இதுதொடர்பாக, மாவட்ட வழங்கல் அலுவலர் உள்ளிட்ட ஊழியர்களிடம், துறையின் கமிஷனர் அலுவலக அதிகாரிகள் மூலம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.
நாமக்கல் மாவட்டம் முழுவதும், நான்கு லட்சத்து, 94 ஆயிரம் ரேஷன் கார்டுதாரர்கள் உள்ளனர். அவர்களுக்கு, மாவட்டம் முழுவதும், 200க்கும் அதிகமான ரேஷன் கடைகள் மூலம் அரிசி, பருப்பு, பாமாயில் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. அதில், அரிசி மட்டும், 63 சதவீதம் கார்டுகளுக்கு, மாவட்ட வழங்கல் துறை மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது.
அதன்படி, ஒவ்வொரு மாதமும், 6,000 டன் அரிசி கொள்முதல் செய்யப்படுகிறது. அதுபோல், 600 டன் சர்க்கரை கொள்முதல் செய்யப்படுகிறது. மேற்குறிப்பிட்ட இந்த அளவுக்கு அதிகமாக அரிசி, சர்க்கரை கொள்முதல் செய்யக்கூடாது என, வாய்மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.
இந்நிலையில், கடந்த ஏப்ரல் மாதம், ரேஷன் கடை மூலம், 6,000 டன்னுக்கு அதிகமாக அரிசி வினியோகம் செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, 300 டன் ரேஷன் அரிசி கூடுதலாக விற்பனை செய்யப்பட்டது, மாவட்ட வழங்கல் துறை கணக்கீடு மூலம் தெரியவந்தது.
இது, மாவட்ட நிர்வாகத்தின், "புருவத்தை' உயர்த்தியுள்ளது. அரிசி கடத்தல் உள்ளிட்ட முறைகேடான செயல்களுக்கு, ரேஷன் அரிசி பயன்படுத்தப்பட்டால் மட்டுமே, அரிசி கொள்முதல் அதிகமாக வாய்ப்புள்ளது என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது.
இதுதொடர்பாக, மாவட்ட வழங்கல் அலுவலர் உள்ளிட்டோரிடம், துறையின் கமிஷனர் அலுவலக அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.
வழங்கல் துறை அலுவலர்கள் சிலர் கூறியதாவது:
நாமக்கல் மாவட்டத்தை பொறுத்தவரை, நான்கு லட்த்து, 94 ஆயிரம் ரேஷன் கார்டுகள் இருந்தபோதிலும், மூன்று லட்சத்து, 75 கார்டுகளுக்கு மட்டுமே, 6,000 டன் அரிசி கொள்முதல் செய்யப்படுகிறது.
ரேஷன் அரிசியை மக்கள் வாங்காததே அரிசி குறைவாக கொள்முதல் செய்யப்படுவதற்கான

காரணமாகும். ஆனால், ஏப்ரல் மாதம், ஐந்து சதவீத அரிசி கூடுதலாக கொள்முதல் செய்து, வினியோகிக்கப்பட்டுள்ளது.
ஒவ்வொரு மாதமும், ரேஷன் பொருள் விற்பனை அளவு கணக்கீடு செய்யப்படும். அந்த வகையில், ஏப்ரல் மாதம் ரேஷன் அரிசி வினியோகம் அதிகரித்துள்ளது. இதுதொடர்பாக கமிஷனர் அலுவலகம் மூலம் விசாரணை நடத்தப்பட்டது. ரேஷன் அரிசி வினியோகம் அதிகமாவதற்கு, அவை முறைகேடாக விற்பனை செய்வது, கடத்துவது போன்றவையே காரணமாகும்.
கடந்த சில மாதங்களாக பள்ளி மாணவர்கள் வயதையொத்த சிறுவர்கள் மூலம் ரேஷன் அரிசி கடத்தும் புரோக்கர்கள், ஹோட்டல்களுக்கு ரேஷன் அரிசியை விற்பனை செய்து வருகின்றனர். சிறிய வயதுடையவர்கள் என்பதுடன், குறைந்த எடை அரிசி என்பதால் சந்தேகம் எழுவதில்லை. அதுபோல், கோழிப்பண்ணைகளுக்கும் ரேஷன் அரிசி கடத்தப்படுகிறது.
இவ்வாறு அவர்கள் கூறினர்.

## நிலக்கடலை சாகுபடி தொழில் நுட்பம்: வேளாண் துறை அறிவுரை

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், வைகாசி பட்டத்தில் நிலக்கடலை பயிர் செய்ய விவசாயிகளுக்கு வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது. வேளாண் துணை இயக்குனர் மேகநாதன் வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில் தற்போது, பரவலாக அனைத்து பகுதியிலும் நல்ல மழை பெய்து வருகிறது. வைகாசி பட்டத்தில், இறவை மற்றும் மானாவாரி நிலக்கடலை சாகுபடி செய்ய உகந்த பருவமாகும். நிலக்கடலை சாகுபடிக்கு மணற்பாங்கான வண்டல், செம்மண் மற்றும் கருவண்டல நிலங்கள் ஏற்றவை. மண்ணின் தன்மைக்கு ஏற்ப இரும்ப கலப்பை அல்லது நாட்டு கலப்பை கொண்டு கட்டிகள் நன்கு உடையும் வரை உழவு செய்ய வேண்டும். கடைசி உழவுக்கு முன் ஏக்கருக்கு ஐந்து டன் தொழு எரு இட வேண்டும். மானாவாரியில் விதைப்பு செய்ய ஏக்கருக்கு சிறிய பருப்பு ரகங்ககள் இருந்தால், 58 கிலோவும், பெரிய பருப்பு ரகங்கள் இருந்தால், 62.5 கிலோவும் தேவை. இதே போல் இறவை நிலக்கடலைக்கு முறையே, 50 கிலோ மற்றும் 55 கிலோ விதை தேவை. டி.எம்.வி.,7, கோ 2, கோ 3, கோ (ஜி.என்) 13 ஆகிய ரகங்கள் இப்பருவத்தில் பயிர் செய்யலாம். விதை கடினப்படுத்துதல் என்ற நவீன தொழில் நுட்பம் மூலம் முளைக்காத விதைகளை தனியாக பிரித்தெடுத்து விட்டு, விதைப்பதன் மூலம் வயலின் சரியான பயிர் எண்ணிக்கையை பராமரிப்பதுடன், பண விரயத்தையும் தவிர்க்கலாம். பயிர்கள் வறட்சியை தாங்கி வளர விதைகளை கால்சியம் குளோரைடு என்ற ரசாயன கரைசலில் ஊற வைத்து உலர்த்தி பின்னர் விதைக்க வேண்டும். இம்முறையில் விதைகளை கடினப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு, 5 கிராம் கால்சியம் குளோரைடு என்ற அளவில், 28 லிட்டர் தண்ணீரில், 140 கிராம் கரைத்து கரைசல் தயார் செய்ய வேண்டும். இக்கரைசலில் ஒரு ஏக்கருக்கு தேவையான விதைகளை ஆறு மணி நேரம் ஊற வைத்து, பின்னர் ஊற விதைகளை ஈரச்சாக்கின், மீது பரப்பி அதை மற்றொரு ஈரச்சாக்கால், 20 முதல், 25 மணி நேரம் மூடி வைக்க வேண்டும். பின்னர் மேலே மூடியுள்ள

சாக்கை நீக்கி சிறிதளவு முளைப்பு கண்ட விதைகளை தனியாக பிரித்தெடுத்து நிழலில் உலர்த்தவும். பின்னர் மீண்டும் ஈரச்சாக்கால் மூடி இரண்டு மணி நேர இடைவெளியில் இரண்டு அல்லது மூன்று முறை சிறிது முளைப்பு கண்ட விதைகளை பிரித்தெடுத்து முன் போல் நிழலில் உலர்த்திய பின் விதைப்பு செய்யலாம். இவ்வாறு கடினப்படுத்தப்பட்ட விதைகள் வறட்சியை தாங்கி வளரும். விதைகளில் தண்ணீர் ஊடுறுவும் திறன் அதிகரிக்கிறது. இளம் பயிர்களில் வீரியம் அதிகரிக்கிறது. முளைக்கும் தன்மையுள்ள விதைகளை கண்டறிந்து, விதைப்பதால், பயிர் எண்ணிக்கை பராமரிக்க முடிகிறது. விதைக்கும் முன் முதலில் விதைகளை ஒரு கிலோ விதைக்கு டிரைக்கோடெர்மா விரிடி, நான்கு கிராம் அல்லது சூடோமோனாஸ் புளோரசன்ஸ், 10 கிராம் என்ற அளவில் கலந்து உயிரியல் விதை நேர்த்தி செய்ய வேண்டும். பின், விதைப்பதற்கு, 24 மணி நேரத்துக்கு முன் உயிர் உரங்களான நிலக்கடலை ரைசோபியம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா தலா இரண்டு பொட்டலங்களை தெவையான அளவு நன்கு ஆறிய அரிசி கஞ்சியுடன் கலந்து விதை நேர்த்தி செய்து, நிழலில் உலர்த்தி பின் விதைப்பு செய்யலாம். மண் ஆய்வு பரிந்துரைப்படி உரமிட வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## சின்ன வெங்காயம் விலை தொடர்ந்து உயர்வு

தர்மபுரி: சின்ன வெங்காய விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.தமிழக அளவில் சின்ன வெங்காய உற்பத்தியில் தர்மபுரி மாவட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. தர்மபுரி, பென்னாகரம், அரூர், பாலக்கோடு உள்ளிட்ட மாவட்டம் முழுவதும், 564 ஹெக்டேரில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.தமிழகத்தில் போதிய பருமழையில்லாத காரணத்தால் சின்னவெங்காய உற்பத்தி பாதிக்கப்பட்டது. இதனால், சின்ன வெங்காய விலை கடந்த சில மாதங்களாக தொடர்ந்து அதிகரித்து வந்தது. கடந்த, ஏப்ரல் மாதம், ஒரு கிலோ சின்ன வெங்காயம், 40 முதல், 45 வரை விற்பனை செய்யப்பட்டு வந்தது. இதை தொடர்ந்து விவசாயிகள் ஆர்வத்துடன் சின்னவெங்காய சாகுபடியில் ஈடுபட துவங்கினர். சாகுபடி செய்த சின்ன வெங்காயம் சில தினங்களில் அறுவடைக்கு வரவுள்ளது. இந்நிலையில், தமிழகத்துக்கு வடமாநிலங்களில் இருந்து கடந்த சில தினங்களாக சின்னவெங்காய வரத்து குறைந்துள்ளது. தமிழகத்தில் சின்னவெங்காய விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. நேற்று (ஜூன் 4) சந்தையில், ஒரு கிலோ சின்னவெங்காயம், 75 ரூபாய் முதல், 85 ரூபாய் வரை விற்பனையானது.

## விவசாய மலர்

## ஐம்பதாண்டு பலன் தரும் வலையபட்டி முருங்கை



முறையான இயற்கை உரம் தந்து மரமுருங்கையை பராமரித்தால், தென்னையை விட கூடுதலாக, 50 ஆண்டுகள் வரை தொடர்ந்து பலன் தரும். இயற்கை உரம் தந்து, காய், கீரைகளை பெறுவதோடு, முருங்கைக் கன்றுகள் உற்பத்தியிலும் ஈடுபட்டு வருகிறார், திண்டுக்கல் பள்ளப்பட்டியைச் சேர்ந்த முருங்கை விவசாயி கே.பி.எம்.சடையாண்டி.

""ரசாயன உரத்தில் எனக்கு ஈடுபாடு இல்லை. மண்புழு உரமும், பஞ்சகாவியம், இயற்கை பூச்சிகொல்லிகள்தான் மண்ணை பொன்னாக்கும். நல்ல காய்ப்புத் திறன் உள்ள மரத்தில்தான் "விண் பதியம்' முறையில், கன்றுகள் உற்பத்தி செய்கிறேன். விதைகள் மூலம் வளர்த்தால், காய்ப்புக்கு இரண்டு ஆண்டுகளாகும். சாதாரண பதியன் முறையில், கன்றுகளின் இறப்பு விகிதம் அதிகமாக இருக்கும். "விண் பதியம்' முறையில், உயிர்வாழும் திறன் அதிகமாக இருக்கும். வளர்ந்த மரத்தில் சிறுகத்தியால் தண்டுப்பகுதியின் மேற்தோலை வட்ட வடிவமாக வெட்டியெடுக்க வேண்டும். அந்த இடத்தில் தென்னை நார்க்கழிவு, நுண்ணுயிர், பஞ்சகாவியம் கலந்து 40 சதவீத ஈரப்பதத்துடன் பாலித்தீன் பேப்பரை வைத்து நூலால் இருபுறமும் இறுக்கி கட்ட வேண்டும். 30 நாட்களில் வேர் விட்டிருப்பது பாலித்தீன் பேப்பர் வழியாக வெளியே தெரியும். அதிலிருந்து சற்றே கீழ் பகுதி வரை வெட்டியெடுக்க வேண்டும்.

இதை தனியாக சிறுபைகளில் ஒரு மாதம் வரை வளர்க்க வேண்டும். இந்த கன்றுகள் ரூ.30க்கு கிடைக்கிறது. முருங்கையை ஒடித்து வளர்க்க வேண்டும். இல்லாவிட்டால் நீண்டு உயர்ந்து வீணாகிவிடும். கன்றை பூமியில் நட்ட 40வது நாளில் நுனிக் கிளைகளை கிள்ளி விட வேண்டும். சிம்புகள் அதிகம் வெடிக்கும். அடுத்தடுத்து ஒரு மாத இடைவெளியில் இரண்டு முறை கிளைகளை வெட்டினால், 30 சிம்புகள் வரை படர்ந்துவிடும். அதன்பின் பூப்பிடிக்கும். கிளைகளை வெட்ட வேண்டியதில்லை.

கன்றை நட்ட ஆறாவது மாதத்தில் பூப்பிடிக்கும். எட்டாவது மாதத்தில் காய்க்கும். நோய் தாக்குதல் இருக்காது. வெறும் வேப்பஎண்ணெய், பஞ்சகாவ்யம் கொடுத்தால் போதும். முதல் பருவத்தில் மரத்திற்கு 50 கிலோவும், இரண்டு மாத இடை வெளியில் மூன்று காய்ப்பில் மொத்தம் 200 கிலோ கிடைக்கும். ஏழு ஏக்கரில் முருங்கை நடவு செய்துள்ளேன்.

சீசன் இல்லாத நேரத்தை கணக்கிட்டு, கன்று உற்பத்தி செய்யும் போது, காய்ப்பும் அந்தநேரத்தில் கிடைக்கும். மற்றநேரங்களில் எல்லா இடங்களில் இருந்தும் முருங்கைக்காய் வரத்து கிடைக்கும். சீசன் இல்லாத நேரங்களில் காய்களுக்கு கூடுதல் விலை கிடைக்கும். நமக்கும் நல்ல லாபம் வரும். நான்கு மாதத்திற்கு ஒருமுறை மண்புழு உரமும், ஆண்டுக்கு ஒருமுறை ஆட்டுக்கிடை மூலம்

புழுக்கையும் உரமாக தருகிறேன். முறையாக கோடை உழவு செய்வேன். களைகளை சுத்தமாக வெட்டி எடுப்பதால், வெளியிலிருந்து புழுக்கள் மண்ணில் விழுவது குறையும். இந்த ரகம் எங்கிருந்தோ வந்தது அல்ல. மதுரை பாலமேடு வலையபட்டி மர முருங்கை ரகம் தான். செடி முருங்கையை விட கீரை, காய்கள் மிக சுவையாக இருக்கும், என்றார்.

**தொடர்புக்கு: 97913 74087.**

## நவீன தொழில்நுட்பம்



**செண்டுமல்லி சாகுபடி நுட்பங்கள்:** நல்ல வடிகால் வசதியுடன் கூடிய எல்லாவகை மண்ணிலும் பயிரிடலாம். களர், உவர் நிலங்கள் சாகுபடிக்கு ஏற்றதல்ல. சீரான மிதவெப்ப நிலை அவசியம். சமவெளி மற்றும் மலைப்பிரதேசங்களில் பயிரிடலாம். ஆண்டு முழுவதும் அனைத்துப் பருவங்களிலும் பயிரிடலாம்.

பிரத்யேக ரகம் - மேக்ஸிமா யெல்லோ. நிலத்தை நன்கு உழுது கடைசி உழவின்போது எக்டருக்கு 25 டன் மக்கிய தொழுஉரம் இடவேண்டும். பின் 15 செ.மீ. இடைவெளியில் பார்கள் **அமைக்க வேண்டும். விதையளவு:** எக்டருக்கு 15 கிலோ.

**நடும் பருவம்:** ஆண்டு முழுவதும். இருந்தாலும் ஜூன் - ஜூலை மாதங்கள் நடவு செய்ய ஏற்றது.

**நாற்றங்கால்:** நிலத்தை 2-3 முறை நன்கு உழுது கடைசி உழவின்போது மக்கிய தொழு உரம் இட்டு நன்கு கலக்கிவிட வேண்டும். விதைகளை 200 கிராம் அசோஸ்பைரில்லம் கொண்டு நேர்த்தி செய்து பின் 15 செ.மீ. இடைவெளியில் விதைகளை வரிசையில் பாத்திகளில் விதைக்க வேண்டும். மண் கொண்டு மூடி உடன் நீர் பாய்ச்ச வேண்டும். 7 நாட்களில் முளைத்துவிடும். 30 நாட்கள் ஆனவுடன் நாற்றுக்களை பிடுங்கி நடவேண்டும்.

**நடவு:** வரிசைக்கு வரிசை 45 செ.மீ. செடிக்கு செடி 30 செ.மீ. இடைவெளியில் நடவேண்டும்.

**ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை:** ஒரு எக்டக்கு 45 கிலோ தழைச்சத்து, 90 கிலோ மணிச்சத்து, 75 கிலோ சாம்பல் சத்து கொடுக்கக்கூடிய உரங்களை அடியுரமாக இடவேண்டும். நட்ட 45 நாட்கள் கழித்து எக்டருக்கு 45 கிலோ தழைச்சத்து கொடுக்கக்கூடிய உரத்தினை இட்டு மண் அணைக்க வேண்டும்.

**நீர் நிர்வாகம்:** நட்டவுடன் ஒரு தண்ணீர் பின்னர் 3ம் நாள் உயிர்த்தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பின்னர் வாரம் ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும்.

**நுனி கிள்ளுதல்:** நட்ட 30 நாட்களில் செடியின் நுனிப்பகுதி அல்லது முதல் பூ மொட்டுக்களை கிள்ளி எடுக்க வேண்டும்.

**ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு**

**சிவப்பு சிலந்தி:** செடிகளில் இலைகள் மற்றும் பூக்களிலிருந்து சத்தினை உறிஞ்சும். சேதம் அதிகமாகும்போது பூக்கள் காய்ந்துவிடும். கெல்தேன் மருந்தினை ஒரு லிட்டர் நீருக்கு ஒரு மிலி வீதம் கலந்து தெளிக்கவேண்டும்.

**இலைப்புள்ளி நோய்:** முதலில் இலைகளில் வட்டமான சிவப்புநிற புள்ளிகள் தோன்றும். பின்னர் புள்ளிகள் பெருகி இலைகள் கருகிவிடும். பெவிஸ்டின் 1 கிராம் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்க வேண்டும்.

**வேர் அழுகல்:** வளர்ந்த செடிகளையும் நாற்றுக்களையும் தாக்கும். இந்நோய் பாதித்தால் வேர் அழுகிவிடும். பெவிஸ்டின் மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு 1 கிராம் என்ற அளவில் கலந்து செடியைச் சுற்றி ஊற்றிவிட வேண்டும்.

**அறுவடை:** நட்ட 60ம் நாளில் இருந்து பூக்க ஆரம்பித்துவிடும். 80-90 சதவீதம் வரை மலர்ந்த பூக்கள் 3 நாட்களுக்கு ஒரு முறை அறுவடை செய்யலாம்.

**மகசூல்:** ஒரு எக்டருக்கு 18 டன் பூக்கள் கிடைக்கும்.

**அனுபவ விவசாயி:** அமுதா, த/பெ.மெய்யர், பேத்தாம்பட்டி, திருவரங்குளம் போஸ்ட், ஆலங்குடி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம். 91592 34283. இவர் 10 செண்ட் நிலத்தில் ஈஸ்ட்வெஸ்ட் நிறுவனத்தின் செண்டுமல்லி ரகத்தினை பயிரிட்டு ரூ.70,000 வரை நிகரலாபம் பெற்றுள்ளார்.

**மேலும் விபரங்களுக்கு:** உடுமலை, பொள்ளாச்சி, கோவை-99656 23265; புதுக்கோட்டை-81220 71332; மதுரை-73737 35484.

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

## பாபட்லா (பி.பி.டி 5204) நெல்ரகம்



பாபட்லா நெல் ரகம் விவசாயிகளுக்கு உற்ற தோழனாகிவிட்டது. விவசாயிகள் 75 கிலோ மூடை 40 வரை மகசூலாக எடுத்துள்ளனர். பயிர் தரையோடு தரையாக கீழே சாய்வதில்லை. வியாபாரிகள் 75 கிலோ நெல்லை அரவை செய்தபோது 57 கிலோ அரிசி கிடைத்துள்ளது. அரவையில் அரிசி நுனி உடைவது கிடையாது. காவிரி, டெல்டா பகுதிகளில் பாபட்லா 5204 தொடர்ந்து சாகுபடி செய்யப்படுகின்றது. தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப் பள்ளியில் மிக அதிக மகசூலினைக் கொடுத்து விவசாயிகளிடம் நல்ல மதிப்பினைப் பெற்றுள்ளது. இப்பகுதியில் இந்த வருடம் பாபட்லா ஒரு பணப்பயிர் என்ற அந்தஸ்தை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. வியாபாரிகள் நல்ல விலை கொடுக்கின்றனர். விவசாயிகளின் நண்பன் என்ற பெயர் பெற்ற திருக்காட்டுப் பள்ளியில் உள்ள சுந்தரம் பாபட்லாவில் இந்த வருடம் கண்டசிறப்பு, விவசாயிகளின் மதிப்பினைப் பெற்றுள்ளது என்கிறார்.

பாபட்லா நெல் ரகம் கிருஷ்ணகிரி பகுதியில் திருந்திய நெல் சாகுபடியில் ஏக்கரில் ரூ.15,418 லாபமும், சாதாரண முறையில் ரூ.9,688 லாபமும் கொடுத் துள்ளது. தமிழக விவசாயிகளுக்கு பாபட்லா நெல் ரகத்தில் வியாதிகள் விழுந்தாலும் அதனைக் காப்பாற்ற வழிகளை தெரிந்து வைத்துள்ளனர். தமிழகம் முழுவதும் இதன் அரிசியின் தரத்தினால் நுகர்வோர்கள் விரும்புகின்றனர். ஆந்திரா விவசாயிகள் பாபட்லாவை ஜிலகரப்பொன்னி என்று அழைக்கின்றனர். ஜிலகரம் என்றால் சீரகம் என்று அர்த்தம். அரிசி சீரகத்தைப் போன்று சன்னமாக உள்ளது. பொன்னி போன்று அரிசி இருப்பதால் இதன் அரிசி சிறந்த சமைக்கும் தன்மையைக் கொண்டுள்ளது. தமிழகம் முழுவதும் விவசாய இலாகா திருந்திய நெல் சாகுபடியை பிரபலப்படுத்தி வருகின்றது. இதற்காக பிரத்யேகமாக பயிற்சி அளிக்கப்படுகின்றது. விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடிக்கு பாபட்லா 5204 நெல் ரகத்தை தேர்ந்தெடுக்கலாம்.

பாபட்லா நெல் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகளும் பிரத்யேக பயிற்சியிலும் சேர்ந்து வெற்றிபெறலாம். சுந்தரம் முக்கியமான கருத்தினை தெரிவித்து இருக்கிறார். விவசாயிகளின் வீட்டிலேயே அதிக விலை கொடுத்து கிலோவிற்கு ரூ.21 வீதம் ரொக்கம் கொடுத்து வியாபாரிகள் வாங்கிச் செல்கிறார்கள். அதே நேரத்தில் அரசாங்க நேரடி கொள்முதல் நிலையத்தில் கிலோ ரூ.13.50 வீதம் விற்பனை செய்து கூலி மற்றும் இதர செலவுகள் போக ரூ.11.50 விவசாயிக்கு கிடைத்துள்ளது. பி.பி.டி.5204 நெல் விற்பனையில் ஒரு ஏக்கருக்கு விவசாயிக்கு விலை வித்தியாசத்தில் மட்டும் ரூ.20,000 கூடுதலாகக் கிடைக்கிறது. வருங்காலத்தில் பி.பி.டி.5204 அதிக அளவு சாகுபடி செய்தாலும் 70 சதவீத நுகர்வோர்கள் சன்ன ரக அரிசியை விரும்புவதாலும், அரிசி நுனி உடையாமல் இருப்பதாலும் பி.பி.டி.5204 நெல்லிற்கு நல்ல மரியாதையும் விற்பனையும் உண்டு என்பது நிச்சயம்.

**-எஸ்.எஸ்.நாகராஜன்**

## எலுமிச்சை சொறி நோய்

எலுமிச்சை மரங்களைத் தாக்கும் நோய்களில் மிகவும் முக்கியமானது சொறி நோயாகும். இந்நோய் எலுமிச்சை பயிரிடப்படும் அனைத்துப் பகுதிகளிலும் காணப்படும் இந்நோய் ஒருவித பாக்டீரியாவினால் ஏற்படுகின்றது.

**நோயின் அறிகுறிகள்:** இலை, கிளை, சிறுகிளைகள், முள், காய் மற்றும் பழங்களிலும் சொறிப் புள்ளிகள் தோன்றும்.

* குச்சிகளில் தோன்றும் சொறிப்புள்ளிகளால் குச்சிகள் காய்ந்துவிடும்.

* காய்களில் தோன்றும் சொறிப் புள்ளிகளைச் சுற்றிலும் மஞ்சள் நிற வளையம் தோன்றும்.

*பழங்களில் தோன்றும் சொறிப் புள்ளிகளில் வெடிப்புகள் தோன்றும்.

* நோயினால் பழங்களின் தோல்பகுதி பாதிப்பிற்கு உள்ளாகின்றன.

* பழங்களில் சாறின் அளவும் குறைகின்றது.

* சொறி நோயுற்ற பழங்களின் சந்தை மதிப்பு வெகுவாகக் குறைகின்றது.

* பழத்திலுள்ள சொறிப்புள்ளிகள் மற்றும் வெடிப்புகள் மற்ற அழுகல் நுண்ணுயிர்கள் உட்புக வழி உண்டாக்குகின்றன.

* சொறி நோயினை ஏற்படுத்தும் பாக்டீரியா, இலைத்துளைகள் மூலமாகவோ அல்லது பூச்சி அல்லது முட்களினால் ஏற்படும் காயங்கள் மூலமாகவோ உட்புகுந்து தாக்குதலை துவங்குகின்றது.

* நோய் ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்கு மழைத்துளிகள், காற்று மற்றும் இலை துளைக்கும் பூச்சிகள் மூலம் பரவுகின்றது.

**கட்டுப்படுத்தும் நுட்பங்கள்:**

* நோயுற்றுக் கீழே உதிர்ந்து கிடக்கும் இலைகளையும், சிறு குச்சிகளையும் சேகரித்து எரித்துவிட வேண்டும்.

* மரங்கள் சிறப்பாக வளர நன்கு பரிந்துரைக்கப்பட்ட அளவு உரமிட்டு முறையாக தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

* பழத்தோட்டங்களில் நோயுற்ற மரங்களிலிருந்து நோயுற்ற சிறு குச்சிகளை வெட்டி தீயிட்டு அழிக்கவும். பின் கவாத்து செய்த உடன் 0.30 சதம் தாமிர ஆக்சிகுளோரைடு மருந்து தெளிக்க வேண்டும். இதனை தொடர்ந்து மூன்று முறை ஸ்ட்ரெப்டோசைக்ளின் 100 பி.பி.எம். (100 மில்லி கிராம்/ 1லிட்டர் தண்ணீர்) மற்றும் 0.30 சதம் தாமிர ஆக்சிகுளோரைடு கலந்து ஒரு மாத இடைவெளியில் தெளிக்க வேண்டும்.

* மரம் துளிர்விடும் ஒவ்வொரு சமயமும் மரத்தின் அனைத்து பகுதிகளும் நன்றாக நனையுமாறு சூடோமோனாஸ் புளூரசன்ஸ் 0.2 சத கரைசல் (2 கிராம்/1லிட்டர் தண்ணீர்) தெளித்தல் அவசியம்.

* இவ்வகை பாக்டீரியா நோயைக் கட்டுப்படுத்த சூடோமோனாஸ் புளூரசன்ஸ் 0.2 சத கரைசல் (2 கிராம்/1 லிட்டர் தண்ணீர்) தெளிக்கவும். 15 நாட்கள் இடைவெளியில் மீண்டும் ஒருமுறை தெளிக்க வேண்டும்.

* எலுமிச்சையில் தோன்றும் இலைத்துளைப்பான்கள் இந்நோயைப் பரப்புவதால் அவற்றை

பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தெளித்துக் கட்டுப்படுத்துவது அவசியம்.

* வேப்பம் புண்ணாக்கு (5 விழுக்காடு) கரைசலைத் தெளித்தும் இந்நோயினை பரப்பும் பூச்சிகளையும் கட்டுப்படுத்தலாம்.

**முனைவர் மா.சூரியசந்திரசெல்வன், முனைவர் மூ.சாந்தி,**

**முனைவர் ப.அமலாபாலு,**

**ஸ்ரீவில்லிபுத்தூர்-626 125.**

இன்றைய வேளாண் செய்திகள்

05.06.2013 A.M


## மீத்தேன் எரிவாயு திட்டத்தால் விளைநிலம் பாலைவனமாகும் அபாயம்




திருவாரூர்: தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களில் மீத்தேன் எரிவாயு எடுக்கும் திட்டத்தை கைவிட வலியுறுத்தி திருவாரூர் கலெக்டர் அலுவலகம் முன் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம் நடத்தியது.விவசாயிகள் சங்க திருவாரூர் மாவட்ட தலைவர் கலியபெருமாள் தலைமை வகித்தார்.விவசாய சங்க மாநில தலைவரும், சிதம்பரம் தொகுதி எம்எல்ஏவுமான பாலகிருஷ்ணன் பேசுகையில், Ôகெயில் நிறுவனம் விவசாய நிலங்களின் வழியாக எண்ணெய் குழாய் பதிக்கும் பணியில் ஈடுபட்டபோது தமிழக அரசு அதற்கு தடை விதித்தது. அதேபோல் மீத்தேன் எரிவாயு எடுக்கும் இந்த திட்டத்தையும் கைவிட மத்திய அரசிடம் தமிழக அரசு வலியுறுத்த வேண்டும்Õ என்றார்.தஞ்சை: இதேபோல் தஞ்சையில் நேற்று கலெக்டர் அலுவலகம் முன்பு நடந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் சங்க மாநில பொதுச்செயலாளர் சண்முகம் நிருபர்களிடம் கூறியது:மீத்தேன் எரிவாயு எடுக்கும்போது வெளியேற்றப்படும் தண்ணீர், மிகவும் நச்சுத்தன்மை வாய்ந்த உப்பு நீராக இருக்கும். இந்த தண்ணீர் ஆறுகள், வாய்க்கால்கள் மற்றும் வயல்களில் விடப்படும். இதனால் விளைநிலங்கள் தரிசாக மாறும் நிலை ஏற்பட்டு, விவசாயம் முற்றாக பாதிக்கப்படும் என அறிஞர்கள் கூறுகின்றனர். இதன் மூலம் தஞ்சை, திருவாரூர்

மாவட்டத்தில் 2 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாலைவனமாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளதுÕ என்றார்.

## குடிநீர் தேவைக்காக மேட்டூர் அணையில் தண்ணீர் திறப்பு அதிகரிப்பு



மேட்டூர்: மேட்டூர் அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக திறக்கப்படும் நீரின் அளவு விநாடிக்கு 800 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் சில நாட்க ளுக்கு முன்பு மழை பெய் தது. இதனால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. கடந்த 2ம் தேதி விநாடிக்கு 222 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று முன்தினம் 1600 கனஅடியாக அதிகரித்தது. இந்நிலையில், காவிரி நீர்பிடிப்பு பகுதியில் மழை குறைந்ததால், அணைக்கு வரும் நீரின் அளவு நேற்று குறைந்துள்ளது.நேற்று காலை 8 மணி நிலவரப்படி, அணைக்கு விநாடிக்கு 1032 கனஅடி தண்ணீர் வந்தது. பிப்ரவரிக்கு பிறகு இப்போது தான் நீர்வரத்து விநாடிக்கு 1000 கன அடியை தாண்டியுள்ளது. வனப்பகுதியில் பெய்த மழையால், வறண்டு கிடந்த பாலாறிலும் செந்நிறத்தில் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.அதே நேரத்தில், கடந்த 10 நாட்களுக்கு மேலாக குடிநீர் தேவைக்காக 600 கனஅடியாக திறக்கப்பட்ட நீர் அளவு, நேற்று முதல் விநாடிக்கு 800 கன அடியாக அதிகரிக்கப்பட்டது. நேற்று முன்தினம் காலை 18.75 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று காலை 18.89 அடியாக அதிகரித்தது. நீர் இருப்பு 3.78 டிஎம்சி.

## தமிழகத்தில் மழை தொடரும்



சென்னை : கேரளாவில் கடந்த வாரம் தென்மேற்கு பருவமழை காலம் தொடங்கியது. இதையடுத்து அங்கு நல்ல மழை பெய்து வருகிறது. தற்போது பருவ காற்று வலுப்பெற்று வருவதால் தமிழகத்திலும் மழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக நேற்று ஏற்காடு 60 மிமீ, தேவாலா 20 மிமீ, சின்ன கல்லார், தாமரைப்பாக்கம் ஆகிய இடங்களில் 10 மிமீ மழை பெய்துள்ளது.

இந்நிலையில் தெலங்கானா, ஆந்திர கடலோரப் பகுதி, தெற்கு கர்நாட கா, ராயலசீமா உள்ளி ட்ட இடங்களில் தென் மேற்கு பருவமழை மேலும் தீவிரம் அடைந்துள்ளது. தமிழகத்தில் இரண்டு நாட்களுக்கு மழை பெய்யும். குறிப்பாக தென் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்யும். பிற இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யும். சென்னையில் பொதுவாக மேகமூட்டம் காணப்படும். ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யும். மாலை நேரங்களில் மழை பெய்வதற்கான வாய்ப்பும் உள்ளது.

**சக்கரம் சுழல்கிறது**

கூலி வேலைகளுக்கு ஆள் கிடைக்காமல் திண்டாடும் நிலைமைக்கு முக்கிய காரணம் ‘மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம்’ என்ற கருத்து தவறானதாக தெரிகிறது. கிராமங்களில் இதை ‘100 நாள் வேலை திட்டம்‘ அல்லது ‘காந்தி திட்டம்’ என்று குறிப்பிடுகின்றனர்.

வேறு வழியில்லாத ஏழைகளும் ஆண்டுக்கு நூறு நாட்களாவது ஏதேனும் உடலுழைப்பு பணி செய்து ரூ.148 வரை கூலி பெற அரசு செய்த ஏற்பாடு. தமிழகத்தில் சிறப்பாக செயல்படுகிறது. சில மணி நேரம் இருந்துவிட்டு கூலியுடன் வீடு திரும்பினால் இலவச அரிசி சமைத்து சாப்பிட்டு

அரசு டீவியில் சீரியல் பார்த்து ஏழைகள் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர். இதனால்தான் கூலி வேலைக்கு ஆள் கிடைப்பதில்லை என்று ஊடகங்கள் சித்தரிக்கின்றன.

பஞ்சாப், மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகா போன்ற முன்னேறும் மாநிலங்களுக்கு கூலியாட்கள் கிடைப்பது பிகார், உ.பி., சட்டீஸ்கர் மாநிலங்களில் இருந்து. அவர்கள் இப்போது சொந்த மாநிலம் திரும்பிவிட்டனர். ஆனால் அங்கேயும்  ஆள் தட்டுப்பாடு. இத்தனைக்கும் அங்கெல்லாம் வேலை திட்டம் ஆண்டுக்கு 50 நாள் நடந்தாலே பெரிய விஷயம். என்னதான் நடக்கிறது என்று சில சமூக பொருளாதார ஆய்வாளர்கள் சுற்றி விசாரித்தபோது சுவையான தகவல்கள் கிடைத்தன.

இதுவரை பின்தங்கியிருந்த இம்மாநிலங்களில் விறுவிறுப்பான வளர்ச்சி தொடங்கியிருக்கிறது. பெண்கள் வேலைக்கு போகாமல் பள்ளிக்கு சென்று பாடமும் தொழிலும் கற்கின்றனர். குழந்தைகளை வேலைக்கு இழுத்துச் சென்ற அப்பாக்கள் இன்று பள்ளிக்கு அனுப்புகிறார்கள். இதற்கு வசதியாக கூலியை 4 மடங்குவரை உயர்த்திவிட்டனர். ஆள் தட்டுப்பாடு நிலவுவதால் அவர்கள் கேட்கும் கூலியை நிறுவனங்களும் பண்ணையார்களும் தயங்காமல் கொடுத்து விடுகின்றனர்.

கைநாட்டு போட சொன்ன மேஸ்திரி முன்னால் கையெழுத்து போட்டு அதிர வைக்கும் சித்தாள் வெறும் விளம்பர பாத்திரமல்ல; நிஜத்தில் கிராமங்கள் வேகமாக மாறி வருகின்றன என்று ஆய்வாளர்கள் பிரமிப்புடன் விவரிக்கின்றனர். மக்கள் இட மாற்றம், படிப்பறிவு குறித்த சமீபத்திய சென்சஸ் புள்ளிவிவரங்கள் அதை ஊர்ஜிதம் செய்கின்றன. சகிக்க முடியாத அரசியல், நிர்வாக குழப்பங்களுக்கு மத்தியில் இத்தகைய சமூக பொருளாதார மாற்றமும் சாத்தியமாகிறது என்றால் யாரை பாராட்டுவது?

## குறைந்த விலையில் இளநீர் விற்பனை துவக்கம்

அரியலூர், : அரியலூரில் வேளாண்மைத்துறை, புதுவாழ்வு திட்ட துறை சார்பில் குறைந்த விலையில் ரூ.12க்கு இளநீர் விற்பனை துவங்கப்பட்டது.
தமிழ்நாட்டின் பாரம்பரியம் மிக்க பொருட்களான இளநீர், சீயக்காய் மற்றும் பருத்தி ஆகிய பொருட்களின் பயன் மற்றும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தவும், இவற்றை மீண்டும் வழக்கத்திற்கு கொண்டு வருதற்காக சட்டப்பேரவையில் சிறப்பு திட்டத்தை முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். இத்திட்டத்தின்கீழ் அரியலூரில் பாரம்பரிய பொருட்கள் பற்றிய மாவட்ட அளவிலான கருத்தரங்கு நடத்தப்பட்டது.
இதைதொடர்ந்து பொதுமக்களுக்கு குறைந்த விலையில் இளநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்படி விவசாயிகளிடம் நேரடியாக இளநீர் கொள்முதல் செய்யப்பட்டு

வேளாண்மைத்துறை மற்றும் புதுவாழ்வு திட்டம் துறை அலுவலர்களால் அரியலூர் ஆவின் பாலகத்தின் அருகில் குறைந்த விலையில் இளநீர் விற்பனை துவங்கும் நிகழ்ச்சி நடந்தது. இளநீர் விற்பனையை கலெக்டர் ரவிகுமார் துவக்கி வைத்து தெரிவித்ததாவது: மகளிர் சுய உதவிக்குழு மூலமாக ரூ.12க்கு இளநீர் விற்பனை செய்யப்படுகிறது. இளநீர் மருத்துவ குணங்கள் நிறைந்தது. உடலுக்கு புத்துணர்ச்சி அளிக்கக்கூடியது. இளநீரில் வைட்டமின்கள் மற்றும் நம் உடலுக்கு தேவை யான சத்துக்கள் இயற்கையிலேயே கிடைக்கிறது. வெயிலின் தாக்கத்தை தவிர்த்து உடலுக்கு மிகவும் குளிர்ச்சியை தரும் இயற்கை பானமான இளநீரை குறைந்த விலையில் பருக வேண்டும் என்றார்.

வேளாண் இணை இயக்குனர் குணசேகரன், வேளாண் உதவி இயக்குனர் மல்லிகா, புதுவாழ்வு மாவட்ட திட்ட மேலாளர் சுந்தரேஸ்வரன், உதவி திட்ட மேலாளர் ஜீவியராஜ் கலந்து கொண்டனர்.

## களக்காடு மலையில் சாரல் மழை வனவிலங்குகளின் குடிநீர் பிரச்னைக்கு தீர்வு

களக்காடு, : கடந்த ஏப்ரல், மே மாதங்களில் களக்காடு புலிகள் காப்பகத்தில் கடும் வறட்சி நிலவி யது. அருவி மற்றும் நீரோ டைகள் தண்ணீர் இன்றி காய்ந்தன. வனவிலங்குக ளுக்கு கடும் குடிநீர் தட்டுப் பாடு ஏற்பட்டது. இதையடுத்து, வனத்துறையினர் டேங்குகளில் தண்ணீர் நிரப்பி, அதை டிராக்டர் மூலம் எடுத்து வந்து வன

விலங்குகள் குடிநீர் பருகும் தொட்டிகளில் நிரப்பினர்.

இந்நிலையில், கடந்த 1ஆம் தேதி முதல் மலைப்பகு தியில் சாரல் மழை பெய்து வருகிறது. இந்த மழையால் வறண்டு கிடந்த அருவி மற் றும் நீரோடைகளில் தண் ணீர் வரத்து ஏற்பட்டது. தலையணை பச்சையாற்றில் தடுப்பணையை தாண்டி தண்ணீர் விழுகிறது. இதை தொடர்ந்து புலிகள் காப்ப கம் திறக்கப்பட்டு, சுற்றுலா பயணிகள் தலையணை செல்ல அனுமதி வழங்கப்பட்டது. சாரல் மழையால் தலையணையில் உள்ள வனவிலங்குகள் தண்ணீர் பருகும் 10 தொட்டிகளும் நிரம்பி வருகின்றன. எனவே வனவிலங்குகளுக்கு ஏற் பட்ட குடிநீர் தட்டுப்பாடு நீங்கியுள்ளது.

## காட்டுமன்னார் கோவிலில் காவிரி நீருக்காக காத்திருக்கும் விவசாயிகள்

காட்டுமன்னார்கோவில், : காட்டுமன்னார்கோவில் வீராணம் ஏரிக்கு வடவாறு வழியாக தண்ணீர் வரும். ஒவ்வொரு ஆண்டு ஜூன் மாதம் மேட்டூர் அணை திறக்கப்பட்டதும் ஜூலை மாதத்திலிருந்து கீழணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பது வழக்கம். இதன் மூலம் 1 லட்சம் ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெறும். கடந்த ஆண்டு மேட்டூர் அணையிலிருந்து சரியாக தண்ணீர் திறக்கப்படாததால் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டது. இந்த ஆண்டு கர்நாடகத்தில் பருவ மழை பெய்து அங்குள்ள அணைகளில் தண்ணீர் நிரம்பியுள்ளது. எனவே விவசாயிகள் நலன் கருதி, குறுவை சாகுபடிக்கு கர்நாடகாவிடமிருந்து தமிழக அரசு தண்ணீரை

பெற்று தர வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். தற்போது கோடையால் வீராணம் ஏரி வறண்டு கிடப்பதால், குறுக்கு வழியாக செல்ல ஏரியை மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். ஈரப்பதம் இல்லாததால் புல் முளைக்காமல் கால்நடைகள் மேய்ச்சலுக்கு தீனி இல்லாமல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் காட்டுமன்னார்கோவிலில் ஆழ்குழாய் கிணறு மூலம் சில இடங்களில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் முழுக்க மின்சாரத்தை நம்பியே விவசாயம் செய்து வந்தனர். கடுமையான கோடையால் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்ததால் ஆழ்குழாய் கிணறுகள் வறண்டு போனது. பல ஏக்கரில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் தண்ணீரின்றி கருகி வருகிறது. நெல் விலை உயர்வு காரணமாக விவசாயிகள் அதிகளவில் நெற்பயிர் சாகுபடிக்கு மாறினர். ஆனால் ஆழ்குழாய் கிணறுகள் முற்றிலும் வறண்டதால் என்ன செய்வதென்று தெரியாமல் இயற்கையை நம்பியுள்ளனர். வருண பகவான் பார்வை படாவிட்டால் விவசாயிகள் வாழ்க்கை கேள்விக்குறியாகி விடும்.

## பருவமழை துவங்கியுள்ளதால் அமராவதி பாசன வாய்க்கால்களை புனரமைக்க வேண்டும் விவசாயிகள் கோரிக்கை

கரூர், :நீர்பிடிப்பு பகுதியில் பருவ மழை துவங்கியுள்ளதால் அமராவதி பாசன வாய்க்கால்களை புனரமைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்

கரூர் மாவட்ட மக்களின் குடிநீர் மற்றும் பாசன தேவைக்காக திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அமராவதி அணை தண்ணீரை நம்பியுள்ளனர். அமராவதி அணையில் இருந்து வரும் நீரை பயன்படுத்தி மாவட்டத்தில் நெல், கரும்பு, வாழை, சோளம் போன்றவற்றை விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர். அமராவதி ஆற்றுநீர் ராஜவாய்க்கால் வழியாக பாசனத்திற்கு செல்கிறது. அமராவதி ஆற்றுநீர் வரத்தை எதிர்நோக்கி ராஜவாய்க்கால் கடந்த ஆண்டு தூர்வாரப்பட்டது. கரூர் மாவட்டம் பள்ளபாளையம் ராஜவாய்க்காலில் ஆண்டாங்கோவில் மேற்கு எல்லை முதல் கிழக்கு நோக்கி ஆண்டாங்கோவில் கிழக்கு, இனாம் கரூர், பஞ்சமாதேவி, கோயம்பள்ளி, சோமூர் வரை பாசனத்திற்கு தண்ணீர் சென்றது. இந்த ராஜவாய்க்கால் மண்முடி சீத்தை முற்கள் நிறைந்து இருந்தது அகற்றப்பட்டு சீரமைக்கப்பட்டுள்ளது, நீர்வரத்து அதிகமானால் விவசாயத்திற்கு நீர்செல்ல ஏதுவாக இந்த வாய்க்கால்கள் சீரமைக்கப்பட்டிருந்தது. போதுமான நீர்வரத்து கடந்த ஆண்டு இல்லை. மேலும் நகர பகுதியை ஒட்டி இருக்கும் வாய்க்கால்களில் குப்பை கழிவுகள் போடப்படுகின்றன. குறிப்பாக பிளாஸ்டிக் குப்பைகள் அதிகமாக கொட்டப்படுகின்றன. ஏற்கனவே சீரமைத்த அமராவதி ராஜவாய்க்கால் பிளாஸ்டிக் குப்பை நிறைந்து காணப்படுகிறது. திருமாநிலையூர், பசுபதிபாளையம் பகுதியிலும் வாய்க்காலில் பிளாஸ்டிக் கழிவுகளாக காட்சியளிக்கின்றன. பசுபதிபாளையம் பாலத்தின் இறக்கத்தில் டாஸ்மாக் மதுபானக்கடை உள்ளது. இந்த கடையில் இருந்து பிளாஸ்டிக் கழிவுகளை வாய்க்காலில் கொட்டுகின்றனர்.

பெருகிவரும் குடியிருப்பு பகுதியால் வாய்க்கால் தெரியாத அளவுக்கு குப்பைகள் மண்டி கிடக்கிறது. எனவே பாசன வாய்க்கால்களை பொதுப்பணித்துறையினர் புனரமைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுதுள்ளனர். இதுகுறித்து விவசாயி ராமசாமி கூறுகையில், கேரளாவில் பருவ மழை பெய்யத் தொடங்கியுள்ளது. வறண்டு கிடந்த அமராவதி அணைக்கு நீர்வரத்து துவங்கியிருக்கிறது. எனவே கரூர் மாவட்டத்தில் உள்ள வாய்க்கால்களை தண்ணீர் செல்லும் வகையில் புனரமைக்க வேண்டும். அமராவதி ஆற்றுப்பாசன பாதுகாப்புக்கோட்ட அலுவலகம் முன்பு கருரில் செயல்பட்டது. தற்போது இந்த அலுவலகத்தை தாராபுரத்துக்கு மாற்றிவிட்டனர். கோட்ட பொறியாளர் அளவுக்கு அதிகாரிகள் கரூரில் இல்லை. உதவிபொறியாளர் தான் உள்ளார். ஏற்கனவே எதிர்ப்பு தெரிவித்தும் இந்த அலுவலகத்தை மாற்றிவிட்டனர். விவசாயிகள் நலனை கருத்தில்கொண்டு அலுவலகத்தை கரூரில் மீண்டும் அமைக்கவேண்டும். அமராவதி பாசன வாய்க்கால்களை புனரமைக்க திட்ட மதிப்பீடு செய்து உரிய நிதி ஒதுக்கி பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

## தோட்டக்கலை, வேளாண்மை பட்டயப்படிப்புக்கு விண்ணப்பிக்கலாம் பல்கலை. முதல்வர் அழைப்பு

புதுக்கோட்டை, : தோட்டக்கலை, வேளாண் மை பட்டய படிப்புக்கு விண்ணப்பிக்கலாம் என்று குடுமியான்மலை வேளாண்மை பல்கலை. நிலைய முதல்வர் ஜெயராமன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது,

தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகத்தின் கீழ் 2 ஆண்டுகளுக்கான வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டயப்படிப்பு நடத்தப்படுகிறது.

2013, 14ம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் கடந்த 3ம் தேதி முதல் குடுமியான்மலை வேளாண்மை நிலையத்தில் வழங்கப்படுகிறது. பட்டயப்படிப்பில் சேருவதற்கு பிளஸ் 2 தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பொது கல்வி பிரிவில் உயிரியியல், இயற்பியல், வேதியியல் அல்லது தாவரவியல், விலங்கியல், இயற்பியல், வேதியியல் படித்திருக்க வேண்டும்.

தொழிற்கல்வி பிரிவில் உயிரியல் மற்றும் வேளாண்மை செயல்முறை பாடங்களை படித்து இருக்க வேண்டும். விண்ணப்பிக்கும் மாணவர்கள் 1.7.13 அன்று 21 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்கு வயது வரம்பு இல்லை. விண்ணப்பங்கள் மற்றும் தகவல் கையேட்டை ரூ.200, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு ரூ.100 என விற்கப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்கள் தங்களின் சாதி சான்றிதழை கொடுத்து விண்ணப்பங்க ளை பெற்று கொள்ளலாம். தபாலில் பெற விரும்புவோர் முதன்மையர் (வேளாண்மை) மற்றும் தலைவர் (மாணவர் சேர்க்கை), தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவை 641 003 என்ற முகவரிக்கு வேண்டுதல்

கடிதத்துடன் விண்ணப்ப கட்டணம் (தபால் செலவு உட்பட) ரூ.270 க்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோர் ரூ.170 க்கும் வங்கியில் காசோலை எடுக்க வேண்டும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்கள் தங்களின் சாதி சான்றிதழை இணைத்து அனுப்ப வேண்டும். இத்துடன் தங்களின் சுய முகவரியை வேண்டுதல் கடிதத்தில் தெளிவாக குறிப்பிட வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வரும் 24ம் தேதி மாலை 5 மணிக்குள் முதன்மையர் (வேளாண்மை) மற்றும் தலைவர் (மாணவர் சேர்க்கை), தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் 641 003 என்ற முகவரிக்கு கிடைக்குமாறு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்ப வேண்டும்.

இவ்வாறு குடுமியான் மலை வேளாண்மை நிலைய முதல்வர் ஜெயராமன் தெரிவித்துள்ளார்.

## கோடை உழவு செய்து நிலத்தடி நீரை சேமிக்கலாம் விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி வேண்டுகோள்

ஆலங்குடி, : திருவரங்குளம் ஒன்றிய பகுதிகளில் பரவலாக பெய்து வரும் மழையைப் பயன்படுத்தி கோடை உழவு செய்து நிலத்தடி நீரை சேமித்து பயன்பெறலாம் என வேளாண்மை உதவி இயக்குநர் சிவக்குமார் விவசாயிகளை கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் குறிப்பாக புதுக்கோட்டை மாவட்டத்தின் சில பகுதிகளில் தற்போது அங்காங்கே கோடை மழை பெய்யத் துவங்கியுள்ளது. உழவு செய்யாத, கெட்டியான நிலத்தில் விழும் மழைத்துளியானது மண் அரிப்பை ஏற்படுத்தி வேகமாக வழிந்து வெளியேறுகிறது. நீரும் அதிக வெப்பத்தால் வெகுவிரைவில் ஆவியாக மாறி வீணாகிறது.

இவற்றைத் தடுக்க கோடை மழை பெய்தவுடன் நிலத்தில் ஈரம் உள்ளபோது உழவு செய்வதன் மூலம் நிலத்தில் நீர் ஊடுருவும். நீர் ஆவியாவதும் தடுக்கப்பட்டு மண் அரிப்பு தவிர்க்கப்படுகிறது. எனவே விவசாயிகள் தங்களது நிலங்களில் கோடை உழவு செய்யலாம்.

கோடை உழவு செய்யும்போது சரிவுக்கு குறுக்கே உழவு செய்வது மிகவும் சிறந்தது.

இதனால் மழை நீர் சால்களில் தேங்கி நின்று மண்ணின் அடிப்பகுதிக்கு செல்லும். மேலும் மண் புரட்டிப் போடப்படுவதால் மண்ணில் உள்ள பூச்சிகளின் கூட்டுப் புழுக்கள் வெளிக்கொணரப்பட்டு பறவைகளால் உண்ணப்படுகின்றன. இதனால் பயிர்களை பூச்சி தாக்குதலும் குறையும்.

எனவே, நிலங்களில் பயிரில்லாத இந்த தருணத்தில் விவசாயிகள் தங்களது நிலத்தில் கோடை உழவு செய்து மழை நீரை சேமித்து பயன்பெறலாம் என திருவரங்குளம் வேளாண்மை உதவி இயக்குநர் சிவக்குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

## குறைந்த அளவு சமையல் மலிவு விலை உணவகங்களில் சாப்பாட்டுக்கு தட்டுப்பாடு மக்கள் பசியோடு திரும்பும் பரிதாபம் எதிர்பார்ப்பை விஞ்சிய கூட்டம்

இதுபற்றி மாநகராட்சி கமிஷனர் தண்டபாணி கூறுகையில், மலிவு விலை உணவகங்களுக்கு மிகப்பெரிய வரவேற்பு கிடைத்துள்ளது. எதிர்பார்த்ததைவிட பலமடங்கு அதிகமான மக்கள் வருகின்றனர். எனவே ஒரு மணி நேரத்திற்குள் உணவு வகைகள் விற்று தீர்ந்து விடுகின்றன. மேலும் தற்போது ஒரு வேளைக்கு 300 பேருக்கு உணவு வழங்கும் வகையில்தான், அரசு உத்தரவு வெளியிடப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என அரசிடம் வேண்டுகோள் வைக்கப்பட்டுள்ளது. அதற்கான உத்தரவு கிடைத்ததும், குறிப்பிட்ட நேரம் முழுவதும் உணவு விநியோகம் செய்யப்படும் என்றார்.

திருச்சி, ஜூன் 4: குறைந்த அளவிலான உணவே சமைக்கப்படுவதால் மலிவு விலை உணவகங்களில் கால்கடுக்க காத்திருக்கும் பலர் ஏமாற்றத்துடன் பசி யோடு திரும்பிச் செல்கின்றனர்.

சென்னை மாநகராட்சி யில் துவங்கப்பட்ட மலிவு விலை உணவகத்திற்கு மக்க ளிடம் வரவேற்பு கிடைத்த தால், பிற மாநகராட்சிகளு க்கும் இந்த திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. அதன்படி திருச்சி மாநகராட்சியில் ஸ்ரீரங்கம் அம்மா மண்ட பம், சத்திரம் பஸ் நிலையம் அருகே உள்ள ஜான் பஜார், ஜங்ஷன் எதிரேயுள்ள ராக்கின்ஸ் ரோடு, தென் னூர் அண்ணா நகர் வாட் டர் டேங்க், புத்தூர் வாட் டர் டேங்க், குப்பாங்குளம், உறையூர் சாலைரோடு வார்டு அலுவலகம், மேலகல்கண்டார்கோட்டை, அரியமங்கலம் அம்மாகுளம், காந்தி மார்க்கெட் அருகேயுள்ள விறகு பேட் டை ஆகிய 10 இடங்களில் மலிவு விலை உணவகம் அமைக்கப்பட்டுள்ளது. இவை கடந்த 2ம் தேதி முதல் செயல்பட்டு வருகின்றன.

இவற்றில் ஒரு இட்லி ஒரு ரூபாய்க்கும், சாம்பார் சாதம் 5 ரூபாய்க்கும், தயிர் சாதம் 3 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. காலை உண வான இட்லி 7 மணிக்கு துவங்கி 10 மணி வரை யிலும், மதிய உணவான சாம்பார், தயிர் சாத விற் பனை பகல் 12 மணிக்கு துவங்கி 3 மணி வரையிலும் விற்பனை செய்ய அரசு உத்தரவிட்டுள்ளது.

அதே போல், காலை நேரத்தில் 300 நபர்களுக்கு தலா 4 இட்லி என்ற அடிப்படையில் 1200 இட்லியும், மதிய நேரத்தில் 400 கிராம் சாம்பார், 300 கிராம் தயிர் சாதம் தலா 300 பேருக்கும் விற்பனை செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சுவையாக இருப்பதா லும், விலை குறைவாக இருப்பதாலும் இந்த உணவு வகைகளை வாங்க பொதுமக்கள் கூட்டம் அலைமோதுகிறது. விற்பனை துவங் கும் முன்னரே நீண்ட வரி சையில் காத்திருக்கின்றனர். குறிப்பாக ஜங்சன் ராக்கின்ஸ் ரோடு, புத்தூர் வாட்டர் டேங்க், உறையூர் சாலைரோடு, ஜான் பஜார் போன்ற உணவகங்களில் நீண்ட வரிசையில் நின்று, டோக்கன் பெற்று சாப் பிட்டு செல்கின்றனர். இவர்களில் வழிப்போக்கர், விற்பனை பிரதிநிதிகள், வியாபார நிறுவனங்களில் பணியாற்றுவோர் அதிக மாக காணப்பட்டனர்.

மேலும், கூட்டம் அதிகரிப்பின் காரணமாக மதிய உணவு வகைகள் குறிப்பிட்ட நேரத்திற்கு

முன்பா கவே விற்பனையாகி விடுகின்றன. நேற்று மதியம் 12 மணிக்கு துவங்கிய விற்ப னை பல உணவகங்களில் 1.30 மணிக்கெல்லாம் முடிந்து விட்டது. இதனால் நீண்ட நேரம் வரிசையில் நின்ற பலருக்கு டோக்கன் கிடைக்கவில்லை.

அவர் கள்  ஏமாற்றத்துடன் திரும் பிச் சென்ற னர். 3 மணி வரை விற் பனை செய்யப் படும் என அறிவித்து விட்டு 1 மணிக்கெல்லாம் மூடுவது ஏன் என சிலர் உணவக ஊழியர்களிடம் தகராறில் ஈடுபட்டனர்.

இதுபற்றி பொதுமக்கள் கூறுகையில், மலிவு விலை உணவகங்கள் மிகவும் பயனுள்ளதாக விளங்குகிறது.  கடைகளில் குறைந்தபட்சம் ரூ.40க்கு கீழ் மதிய உணவு கிடைப்பதில்லை. ஆனால் இங்கு ஒரு சாம்பார், ஒரு தயிர் சாதம் வெறும் 8 ரூபாய்க்கு கிடைக்கிறது. அதன் அள வும் போதுமானதாக உள் ளது.

ஆனால் கூட்டம் அதிக மாக இருப்பதால் பலருக்கு கிடைப்பதில்லை. எனவே உணவு தயாரிப்பினை அதிகமா க்கி, மதியம் 3 மணி வரை விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

## பாரம்பரிய உணவு பொருள் விழிப்புணர்வு கருத்தரங்கம்

தொட்டியம், :  தொட்டியம் அருகே பாரம்பரிய பொருட்கள் குறித்து விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

தொட்டியத்தை அடுத்த திருநாராயணபுரத்தில் உழவர் தினவிழாவின் நிறைவு விழா, பாரம்பரியமிக்க சிறு தானிய பொரு ட்கள் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. ஒன்றியக்குழுத் தலைவர் சேதுபதி தலைமை வகித் தார்.

மத்திய திட்ட வேளாண் துணை இயக்குனர் சந்திரசேகரன், தொட்டியம் வேளாண் உதவி இயக்கு னர் ராஜாமணி, ஆத்மா சேர் மன் மணிகுட்டி, வேளாண் கூட்டுறவு சங் கத் தலைவர் சங்கர், வங்கி செயலாளர் சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொட்டியம் வேளாண்மை அலுவலர் வேல்முருகன் வரவேற்று பேசினார்.

சிறுகமணி வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் சகுந் தலை, வேளாண் விற்பனை மற்றம் வணிகத்துறை அலு வலர் புஷ்பா, விதைச்சான்று அலுவலர் சோழ ராஜன், வேளாண் பொறி யியல் துறை உதவி பொறி யாளர் வெற்றிவேல், பட்டு வளர்ச்சித்துறை ஆய்வா ளர் ராஜமுத்து, கால்நடை உதவி மருத்துவர் சக்தி வேல் ஆகியோர் தொழில் நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தனர்.விழாவில் பாரம்பரியம் மிக்க சிறுதானியங் கள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. இதற் கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் ஆசைத்தம்பி, மாசிலா மணி, கார்த்திக்கேயன், யுவராஜ், பன்னீர்செல்வம், கோபிநாத், பாண்டியன் செய்திருந்தனர்.

உதவி வேளாண் அலுவலர் அழகிரிசாமி நன்றி கூறினார்.

## முழு மானியத்தில் விவசாய சங்கத்திற்கு பவர் டில்லர்

திண்டுக்கல், :

திண்டுக்கல் கலெக்டர் அலுவ லகத்தில், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ.1.09 லட்சம் மதிப்பிலான பவர் டில்லர் முழு மானியத்தில் விவசாய சங்கத்திற்கு வழங்கப்பட் டது. பவர் டில்லரை கோட்டூர் ஆவாரம்பட்டியைச் சேர்ந்த பசுமை ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் விவசாய சங்கத்திற்கு கலெக்டர் வெங்கடாசலம் வழங்கினார். பசுமை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாய சங்கத்தில் 15 விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். உரிய முறையில் இவற்றை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கலெக்டர் கேட்டுக் கொண்டார். நிகழ்ச்சியில் வேளாண் இணை இயக்குநர் சம்பத்குமார், துணை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி, உதவி இயக்குநர் அருள் அரசு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

05.06.2013 A.M

## தொடர் மழையால் கள்ளக்குறிச்சி பகுதியில் கருகிய பயிர்கள் துளிர்விட தொடங்கியது விவசாயிகள் மகிழ்ச்சி

கள்ளக்குறிச்சி,

தொடர் மழையின் காரணமாக கள்ளக் குறிச்சி பகுதியில் கருகிய பயிர்கள் துளிர்விட தொடங்கியது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி யடைந் துள்ளனர்.

கரும்பு பயிர் கருகியது

கள்ளக்குறிச்சி பகுதியில் கடந்த சில மாதங்களாக வெயில் வாட்டி எடுத்தது. எந்த ஆண்டிலும் இல்லாத அளவிற்கு கோடை வெயில் சுட்டெரித்தது. இதனால் ஏரி, குளங்கள் தண்ணீர் இன்றி வறண்டது. மேலும் நிலத்தடி நீர் மட்டமும் படிப்படியாக குறைந்தது. கோடை மழை பெய்யும் என நம்பி காரனூர், குதிரைச்சந்தல், நல்லாத்தூர், விளம்பார், லட்சியம், மலைக் கோட்டாலம், புக்கிரவாரி, சிறுமங்கலம், பெருமங்கலம, பெரியசிறுவத்தூர், மேலூர், ஏரவார், வாணவரெட்டி, சின்னசேலம் ஆகிய பகுதிகளில் பயிர்செய்த விவசாயிகளுக்கு பெரிய ஏமாற்றமே மிஞ்சியது. மழையின்றி பல நூறு ஏக்கர் கணக்கில் பயிரிட்டிருந்த கரும்பு உள்ளிட்ட பயிர்கள் கருகியது. மேலும் பல ஏக்கர் கரும்பு பயிர்கள் கருகும் நிலையில் இருந்தது.

மழையால் மகிழ்ச்சி

இந்த நிலையில் கள்ளக் குறிச்சி பகுதியில் கடந்த ஒரு வாரமாக தொடர்ந்து பரவ லாக மழை பெய்து வருகிறது. இதனால் சுட்டெரித்த வெயிலின் தாக்கம் குறைந்து குளிர்ந்த காற்று வீசியது. மேலும் பூமியும் குளிர்ந்தது. இதன்காரணமாக கருகிய நிலையில் இருந்த கரும்பு பயிர்கள் தற்போது துளிர்விட தொடங்கியது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சிய டைந்துள்ளனர்.

## வறட்சி நிவாரண தொகை எப்போது கிடைக்கும்? தாந்தோன்றி பகுதி விவசாயிகள் எதிர்பார்ப்பு

வெள்ளியணை,

வறட்சி நிவாரண தொகை எப்போது கிடைக்கும்? என தாந்தோன்றி பகுதி மக்கள் எதிர் பார்த்து கொண்டு இருக்கிறார்கள்.

நிவாரண தொகை

கடந்த மூன்று ஆண்டுகளாக பருவ மழை பொய்த்து தமிழகம் கடுமையான வறட்சியின் பிடியில் சிக்கி உள்ளது. நிலத்தடி நீர் மட்டம் குறைந்து விவசாயிகள் கால் நடைகளுக்கு தீவனப்பயிர் கூட பயிரிட முடியாத சூழ்நிலை ஏற்பட்டு வெளியிடங்களில் விலை கொடுத்து தீவனப்பயிர்களை வாங்கி கால்நடைகளை வளர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டு உள்ளது.

இதை தொடர்ந்து விவசாயிகள் தமிழக அரசிடம் வறட்சி நிவாரணம் வழங்க கோரிக்கை வைத்ததின் பயனாக தமிழக அரசு சென்னை மாவட்டம் நீங்கலாக 31 மாவட்டங் களையும் வறட்சி மாவட்ட மாக அறிவித்து விவசாயி களுக்கு நிவாரணத் தொகை வழங்கி வருகிறது.

கலெக்டரிடம் புகார்

இந்த நிலையில் கரூர் மாவட்டம் தாந்தோன்றி ஒன்றியம் வெள்ளியணை, கே.பிச்சம்பட்டி, ஜெகதாபி, மூக்கணாங்குறிச்சி, பாகநத்தம், மணவாடி, காக்காவாடி, தாளப்பட்டி உள்ளிட்ட பல ஊராட்சி பகுதி விவசாயிகள் வறட்சி நிவாரணம் கிடைக்கவில்லை என புகார் தெரிவித்து உள்ளனர். பல விவசாயிகள் தனித் தனியாக சென்று மாவட்ட கலெக்ட ரிடம் வறட்சி நிவாரணம் வேண்டி மனு கொடுத்து வருகிறார்கள்.

ஆய்வு செய்து நிவாரணம்

இந்த நிலையை மாற்றி வருவாய்த் துறை அதிகாரி களும், வேளாண்மைத்துறை அதிகாரிகளும் ஊராட்சி பகுதிகளுக்கு நேரடியாக சென்று பார்வையிட்டு பாதிக்கப்பட்டுள்ள விவசாய நிலங்கள், தென்னை மரங்கள் போன்றவற்றை ஆய்வு செய்து அதற்கு தகுந்தாற்போல் வறட்சி நிவாரணத் தொகையை உடனடியாக விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என சம்பந்தப்பட்ட பகுதி விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

இது குறித்து அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப் பார்களா? என பொருந்திருந்து தான் பார்க்க வேண்டும்.

## கல்யாணபுரம் ஊராட்சியில் கறவை மாடுகள் வழங்க 50 பயனாளிகள் தேர்வு

சேத்துப்பட்டு,

பெரணமல்லூர் ஒன்றி யம் கல்யாணபுரம் ஊராட்சியில் நடந்த கிராமசபை கூட்டத்தில் விலையில்லா கறவை மாடுகள் வழங்க 50 பய னாளிகள் தேர்வு செய்யப் பட்டனர்.

கிராமசபை கூட்டம்

திருவண்ணாமலை மாவட் டம் பெரணமல்லூர் ஒன்றியம் கல்யாணபுரம் கிராமத்தில் தமிழக அரசின் சிறப்பு திட்டமான விலையில்லா கறவைமாடுகள் வழங்க சிறப்பு கிராம சபா கூட்டம் நடந் தது. ஊராட்சி மன்ற தலைவர் கிருஷ்ணவேணி ஏழுமலை தலைமை தாங்கினார், துணைத்தலைவர் வேதபுரி, மகளிர் சுயஉதவிக்குழு ஊக்கு னர் நதியா, வார்டு உறுப்பினர் வாசகி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி செயலர் வ.ஏழுமலை வரவேற்றார்.

50 பேர் தேர்வு

சிறப்பு விருந்தினராக பெரணமல்லூர் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தணிக்கை) கே.பாலு எறும்பூர் கால்நடை மருத்துவர் விஜய குமார் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். கிராமசபை கூட்டத்தில் கறவை மாடுகள் வழங்க 50 பயனாளிகள் தேர்வு செய்து அறிவிக்கப்பட்டனர். சாமுண் டீஸ்வரி, குணசேகர், சம்பத், கோகிலா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## வறட்சியை சமாளிக்க மாவட்டம் முழுவதும் 31 ஆழ்குழாய் கிணறுகள்

ராமநாதபுரம்,

ராமநாதபுரம் மாவட்டத் தில் வறட்சியை சமா ளிக்க 31 ஆழ் குழாய் கிணறுகள் அமைக்கப் பட்டு வருகின்றன.

திட்ட பணிகள்

கடந்த ஆண்டு பருவமழை பொய்த்து போனதால் கடும் வறட்சி நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் சென்னை தவிர அனைத்து மாவட்டங்களையும் முதல்– அமைச்சர் ஜெயலலிதா வறட் சியால் பாதிக்கப்பட்ட மாவட் டங்களாக அறிவித்துள்ளார். இதன்படி ராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சி நிவா ரண பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக மாவட்டத்தில் உள்ள அனைத்து யூனியன்களி லும் மற்றும் அதனை சார்ந்த கிராம ஊராட்களிலும் வறட் சியை சமாளிக்கும் வகை யில் பல் வேறு வளர்ச்சி திட்ட பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

மாவட்டத்தில் மாநில பேரிடர் மேலாண்மை நிவா ரண திட்டத்தின் கீழ் 31 ஆழ் குழாய் கிணறுகள் ரூ.77 லட் சத்து 30 ஆயிரம் செலவில் அமைக்கும் பணி நடை பெற்று வருகின்றது. திருவா டானை யூனியனில் 6 கிணறு களும், ஆர்.எஸ்.மங்கலத்தில் 5 கிணறுகளும், கடலாடி, நயி னார்கோவில் ஆகிய யூனி யன்களில் தலா 2 கிணறுக ளும், பரமக்குடி, கமுதி யூனி யன்களில் தலா 4 கிணறுக ளும், முதுகுளத்தூரில் 5 கிண றுகளும், போகலூரில் 3 கிணறு களும் அமைக்கப்பட்டு வரு கின்றன. இதுதவிர திருப்புல் லாணி, போகலூர், கடலாடி யில் தலா 2 திறந்தவெளி கிண றுகளும், ஆர்.எஸ்.மங்கலத் தில் 6, திருவாடானையில் 3 திறந்தவெளி கிணறுகளுமாக மொத்தம் 15 கிணறுகள் ரூ.24 லட்சத்து 40 ஆயிரம் செல வில் அமைக்கும் பணி நடை பெற்று வருகின்றன.

<u>நிவாரண நிதி</u>

மேலும் மின் விசை பம்பு கள் ரூ.73 லட்சத்து 80 ஆயி ரம் மதிப்பில் 23 இடங்களில் அமைக்கப்பட்டு வருகின் றன. குடிநீர் வசதி தேவைப் படும் இடங்களுக்கு குழாய் நீட்டிப்பு பணிகள் ரூ.27 லட்சத்து 50 ஆயிரம் செல வில் 6 இடங்களில் நடை பெற்று வருகின்றன. மேலும் கமுதியில் ரூ.1 லட்சத்து 20 ஆயிரம் மதிப்பில் அடி குழாய் அமைக்கப்பட்டு வரு கிறது. ஆக மொத்தம் ராமநா தபுரம் மாவட்டத்தில் ரூ.2 கோடியே 4 லட்சம் மதிப்பில் 76 பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இந்த பணி கள் அனைத்தையும் விரை வில் முடித்து மக்கள் பயன் பாட்டுக்கு கொண்டு வர நட வடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

இதுதவிர ஆர்.எஸ்.மங்கலம் யூனியனில் திருப்பாலைக்குடி பகுதியிலும், திருவாடானை யூனியனில் காரங்காடு, முள்ளி முனை, புதுப்பட்டினம் ஆகிய பகுதிகளில் டேங்கர் லாரி கள் மூலம் குடிநீர் சப்ளை செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. ராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறட்சியை கருத்தில் கொண்டு புதிய குடிநீர் திட்டங்கள் உள்ளிட்ட பணிகளை மேற் கொள்ள ரூ.27 கோடி வறட்சி நிவாரண நிதி அரசிடம் கோரப் பட்டுள்ளது. இந்த நிதி பெறப் பட்டதும் தேவையான பணிகள் மேற்கொள்ளப்படும்.

## வறட்சி நிவாரண திட்டத்தில் மீன் வளர்க்க 50 சதவீத மானியம்

சிவகங்கை,

சிவகங்கை மாவட் டத் தில் வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் 50 சத வீத மானியத்துடன் மீன் வளர்ப்பு திட்டம் செயல் படுத்த படவுள்ளது.

<u>மீன்வளர்ப்பு</u>

சிவகங்கை மாவட்ட மீன் வள உதவி இயக்குநர், (உள் நாட்டு மீன்வளம்,) லோக நாதன் விடுத்துள்ள அறிக்கை யில் கூறியிருப்பதாவது:–

வறட்சி நிவாரணத் திட்டத் தின் கீழ் சிவகங்கை மாவட்டத்தில் பல்நோக்கு பண்ணைக் குட்டைகள் 25, சிறு, குறு விவசாயிகளது நிலத்தில், சுமார் 2 ஆயிரத்து 500 ச.மீ பரப்பளவில் (0.25 ஹெக்டேர்) மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் மூலம் வெட்டப்பட்டு, அதில் மீன் வளர்ப்பு மேற்கொள் வதற்கு, மீன்குஞ்சுகள் மற்றும் மீன் தீவனம் வாங்க 50 சதவீத மானியத் தொகை மீன்வளத் துறையால் வழங்கப்படவுள் ளது.

இத்திட்டத்தின் கீழ் வெட்டப்படும் பண்ணைக் குட்டைகள் அமையும் நிலம் களிமண் பாங்காகவும், நீர் ஆதாரம் கொண்டதாகவும் இருத்தல் அவசியம். பல் நோக்கு பண்ணைக் குட்டை களில் 2500 எண்ணிக்கை வளர்ச்சியடைந்த பெருங் கெண்டை இன மீன்குஞ்சுகள் இருப்பு செய்து, 8 மாத கால வளர்ப்பில் 1000 கிலோ மீன் உற்பத்தி செய்யலாம்.

<u>பயிற்சி</u>

தேர்வு செய்யப்படும் விவசாயிகளுக்கு மீன்வளர்ப்பு குறித்து இரு நாட்கள் பயிற்சி அளிக்கப்படும். மீன்வளர்ப்பில் ஆர்வமுள்ள, நில நீர்வசதி கொண்ட சிறு, குறு மற்றும் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின விவசாயிகள் மட்டும் உரிய ஆவணங்களுடன் சிவகங்கை எண்–4, காளிமுத்தன் வீதியில் உள்ள உள்நாட்டு மீன்வள உதவி இயக்குநர் அலுவல கத்தை உடன் அணுகி பயன் பெறுமாறு கேட்டுக் கொள் ளப்படுகிறார்கள். இவ்வாறு அந்த அறிக்கை யில் அவர் கூறியுள்ளார்.

## பசுந்தீவனத்திற்கு ஆயிரம் ஏக்கரில் சோளம் வளர்க்க இலக்கீடு நிர்ணயம்

சிவகங்கை,

பசுந்தீவனத்திற்கு ஆயி ரம் ஏக்கரில் சோளம் வளர்க்க இலக் கீடு நிர்ணயம் செய்யப்பட் டுள்ளது என்று கால் நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் தெரி வித்துள்ளார்.

கால்நடை தீவனங்கள்

சிவகங்கை மாவட்ட கால் நடை பராமரிப்புதுறை இணை இயக்குனர் பாலகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கையில் கூறி யிருப்பதாவது:–

சிவகங்கை மாவட்டத்தில் கால்நடை தீவனங்கள் பற் றாக்குறையை தவிர்க்க ஆயிரம் ஏக்கரில் சோளம் பயிரிட நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் அண்மை யில் பெய்த மழையை பயன் படுத்தி நீர்பாசன வசதியுள்ள இடங்களில் ஒரு வாரத்திற்குள் உழுது உரமிட வேண்டும். அதன் பின்னர் 15 நாட் களுக்குள் அருகில் உள்ள கால் நடை மருத்துவமனைகளில் தங்களது பெயர், இடத்தின் சர்வே எண், பரப்பளவு ஆகிய விவரங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 16 கிலோ சோள விதை வழங்கப்படும்.

மானியம்

அத்துடன் உழுது உரமிட்ட வர்களுக்கு உரிய மானியமும் வழங்கப்படும். ஒரு ஏக்கரில் 10ல் இருந்து 13 டன் சோளம் கிடைக்கும். எனவே விவசா யிகள் இந்தவாய்பினை பயன் படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் அந்த அறிக் கை யில் கூறியுள்ளார்.

## தேனி மாவட்ட குடிநீர் தேவைக்காக முல்லைப்பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறப்பு

கூடலூர்,

தேனி மாவட்ட குடிநீர் தேவைக்காக முல்லைப் பெரியாறு அணையில் இருந்து வினாடிக்கு 100 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது.

முல்லைப்பெரியாறு அணை

தேனி மாவட்டத்தில் உள்ள கம்பம் பள்ளத்தாக்கின் பாசன நீர் ஆதாரமாக முல்லைப் பெரியாறு அணை திகழ்கிறது. கடந்த ஆண்டு பருவ மழைகள் பொய்த்த நிலையில் கோடை மழையும் ஏமாற்றியதால் அணையின் நீர் மட்டம் 113 அடிக்கும் குறைவாக காணப்படுகிறது.

இதனால் அணையில் இருந்து முதல்போக பாசனத் திற்கு ஜூன் முதல்வாரத்தில் தண்ணீர் திறக்க முடியாத நிலை உள்ளது. தென்மேற்கு பருவமழை அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தற்போது பெய்து வருகிறது. இந்த மழை நீடித்து அணைக்கு நீர்வரத்து இருக்கும் பட்சத்தில் அணை யில்

இருந்து கம்பம் பள்ளத் தாக்கு பாசனத்திற்கு இந்த மாத இறுதிக்குள் தண்ணீர் திறக்க வாய்ப்பு ஏற்படும் என்று விவசாயிகள் நம்புகின்றனர்.

இந்நிலையில் தேனி மாவட் டத்தில் கடந்த 2 மாதங்களாக குடிநீர் தட்டுப்பாடு பெரும் பிரச்சினையை ஏற்படுத்தி வருகிறது. பாசனத்திற்கு தண்ணீர் திறக்க முடியாத சூழலில் முல்லைப்பெரியாறு அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக தண்ணீர் திறந்து விட பொதுப்பணித்துறை யினர் திட்டமிட்டனர். இருப் பினும் யானை வாய்க் கால் தூர்வாரும் பணி நடைபெற்ற தால் அணையில் இருந்து குடிநீருக்காக தண்ணீர் திறக்க முடியாத நிலை ஏற்பட்டது.

<u>தண்ணீர் திறப்பு</u>

இந்நிலையில் அந்த பணி முடிவடைந்ததை அடுத்து நேற்று பகல் 1 மணி முதல் அணையில் இருந்து வினாடிக்கு 100 கன அடி வீதம் தேனி மாவட்ட குடிநீர் தேவைக்காக தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த தண்ணீரை பொது மக்கள் சிக்கனமாக பயன்படுத்த மாவட்ட நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. முல்லைப்பெரியாறு அணையின் நீர் மட்டம் நேற்று 112.60 அடியாக காணப்பட்டது. அணைக்கு வினா டிக்கு 185 கன அடி நீர் வரத்து உள்ள நிலையில் அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக 100 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

<u>சுற்றுச்சுவர் அமைக்கும் பணி</u>

இதனிடையே தேனி நகரில் குடிநீர் வினியோகம் செய்து 20 நாட்களுக்கு மேல் ஆகி விட்டது. ஒரு சில வார்டுகளில் கவுன்சிலர்கள் தாங்களாக முன்வந்து வார்டு மக்களுக்கு குடிநீரை டேங்கர் லாரிகளில் வினியோகம் செய்தனர். இந்த நிலையில் தேனி அருகே உள்ள குன்னூர் வைகை ஆற்றில் குன்னூர் கூட்டுக் குடிநீர் திட்ட உறை கிணறுகளை சுற்றி சுற்றுச்சுவர் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதன்மூலம் உறை கிணறு அருகே முல்லைப் பெரியாற்றில் திறக்கப்பட்ட தண்ணீர் பெருகும் வாய்ப்பு உள்ளதால் ஆண்டிப்பட்டி தாலுகாவில் உள்ள கிராமங்களுக்கு உடனடியாக குடிநீர் வினியோகம் செய்ய வாய்ப்பு உள்ளது குறிப்பிடத்தக்கது.

தேனி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் சாரல் மழை பரவலாக பெய்து வரும் நிலையில் நேற்று முன்தினம் பெய்த மழை அளவு விவரம் (மில்லிமீட்டரில்) வருமாறு:– பெரியார்–1.8, தேக்கடி–2.8, கூடலூர்–2, சண்முகாநதி–2.